



PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் **பேப்பர்பாய்**

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY






சென்னை மலர்: 01 இதழ்: 243 15.04.2026 புதன்கிழமை

Chennai Volume: 01 Issue: 243 Wednesday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


# ஹார்முஸ் ஜலசந்தியை மூடியது அமெரிக்கா: கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது

## ஈரான் கப்பல்கள் நுழைந்தால் தகர்க்கப்படும் என ட்ரம்ப் எச்சரிக்கை

**வாஷிங்டன், ஏப்.15:**

கடந்த பிப்.28-ம் தேதி முதல் அமெரிக்கா - ஈரான் இடையே போர் நடைபெற்று வந்தது. கடந்த 8-ம் தேதி இருதரப்பிலும் 2 வாரங்களுக்கு போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக கடந்த 11-ம் தேதி பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. சுமார் 21 மணி நேரம் நீடித்த இந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதையடுத்து, "ஹார்முஸ் ஜலசந்தியை மூடும் நடவடிக்கை விரைவில் தொடங்கப்படும்" என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார்.

இதுகுறித்து அமெரிக்க ராணுவம் நேற்று வெளியிட்ட




அறிக்கையில் கூறியிருப்பதாவது: அதிபர் ட்ரம்ப்பின் உத்தரவை ஏற்று அமெரிக்க நேரத்தின் படி ஏப்.13-ம் தேதி காலை 10 மணிக்கு (இந்திய நேரப்படி ஏப்.13 இரவு 7.30) ஹார்முஸ் ஜலசந்தி மூடப்படும். இதன்பிறகு ஈரான் துறைமுகங்களில் இருந்து வரும் அனைத்து கப்பல்களும் தடுத்து நிறுத்தப்படும். மற்ற நாடுகளின் துறைமுகங்களில் இருந்து வரும் கப்பல்களை தடுக்க மாட்டோம். அவை வழக்கம்போல கடந்து செல்லலாம்.

இவ்வாறு அமெரிக்க ராணுவம் தெரிவித்துள்ளது. இந்திய நேரப்படி நேற்று இரவு 7.30 மணிக்கு ஹார்முஸ் ஜலசந்தியின் இரு புறங்களையும் அமெரிக்க போர்க் கப்பல்கள் சுற்றி வளைத்தன. அமெரிக்காவின் கண்காணிப்பை மீறி ஈரானில் இருந்து வரும் எந்த கப்பலும் ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க முடியாது என்று ராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆபிரகாம் லிங்கன், ஜெரால்டு ஆர் போர்டு, ட்ரிபோலி உட்பட 23 போர்க்கப்பல்கள் மற்றும் 2 நீர் மூழ்கி கப்பல்கள் மத்திய கிழக்கு பகுதியில் முகாமிட்டு உள்ளன. இந்த போர்க் கப்பல்கள், நீர்மூழ்கி கப்பல்கள் மூலம் ஹார்முஸ் ஜலசந்தியின் இருபுறமும் தடுப்பு வேலி அமைக்கப்படும். இவை தவிர 10 கண்காணிப்பு ட்ரோன்கள், கண்காணிப்பு விமானங்களும் ஹார்முஸ் ஜலசந்தியில் கண்காணிப்பு பணியில் ஈடுபடும்.

அமெரிக்க கடற்படையின் 3 கப்பல்கள் ஹார்முஸ் பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியை தொடங்கி உள்ளன என்று அமெரிக்க ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

'ட்ரம்ப் உத்தரவிட்டால், அடுத்த நொடியே ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதல்களை நடத்த தயாராக இருக்கிறோம்' என்று இஸ்ரேல் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கிடையே, ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதால், கச்சா எண்ணெய் விலை 8 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. சர்வதேச சந்தையில் ஒரு பேரல் கச்சா எண்ணெய் 96.57 டாலருக்கு விற்கப்பட்டது. ஜலசந்தி மூடலால் நேற்று ஒரு பேரல் கச்சா எண்ணெய் 105 டாலருக்கு விற்கப்பட்டது.

## இன்றைய நாள்

புதன்கிழமை
(15-04-2026)
பராபவ ஆண்டு, சித்திரை-2
பிறை: தேய்பிறை
திதி
திரயோதசி இரவு 8.55 வரை பிறகு சதுர்த்தசி
நட்சத்திரம்:
பூரட்டாதி நண்பகல் 1.33 வரைபிறகு உத்திரட்டாதி.
யோகம்
அமிர்த/சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 12.00–1.30 மணி
எமகண்டம்
காலை 7.30–9.00மணி.
சூலம் – வடக்கு.
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 4–5 மணி.

| | |
|---|---|
| மேஷம் | நற்செயல் |
| ரிஷபம் | பக்தி |
| மிதுனம் | உயர்வு |
| கடகம் | கவனம் |
| சிம்மம் | ஊக்கம் |
| கன்னி | செலவு |
| துலாம் | பொறுமை |
| விருச்சிகம் | மதிப்பு |
| தனுசு | சாந்தம் |
| மகரம் | உவகை |
| கும்பம் | உதவி |
| மீனம் | மகிழ்ச்சி |

# பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவை தாமதப்படுத்துவது பெரும் அநீதி!: பிரதமர் மோடி

**புதுடெல்லி, ஏப்.15:**

பெண்கள் இட ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்றாமல் தாமதப்படுத்துவது அவர்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதி என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாளை (ஏப். 16) தொடங்கும் நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரில் மக்களவை, சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு வழங்கும் 'பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா - 2023' தொடர்பாக விவாதம் நடத்தி, நிறைவேற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இதுதொடர்பாக, நாட்டின் பெண்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி எழுதியிருக்கும் கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:

"இன்று (ஏப்ரல் 14) இந்திய வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாளாகும். நாட்டை கட்டமைப்பதற்கு நிலையான பங்காற்றிய டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கரின் பிறந்தநாளாகும். நான் அவருக்கு அஞ்சலி செலுத்துகிறேன். மேலும், நமது பயணத்துக்குத் தொடர்ந்து வழிகாட்டி வரும் அரசியலமைப்பு விழுமியங்கள் மீதான அவரது அர்ப்பணிப்பை நினைவுகூருகிறேன்.



அடுத்த இரண்டு நாள்களில் (ஏப். 16), நாடாளுமன்றம் மீண்டும் கூடவுள்ளது. அப்போது, நாரி சக்தி வந்தன் அதினியம் (பெண்கள் இட ஒதுக்கீடு சட்டம்) தொடர்பான ஒரு முக்கியமான அரசியலமைப்புத் திருத்த மசோதா விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக மக்களிடையே மிகுந்த உற்சாகம் நிலவுவதை நான் காண்கிறேன். வளர்ச்சியடைந்த இந்தியாவை கட்டமைப்பதில் பங்களிப்பதற்கான வலுவான வாய்ப்பு கிடைத்திருப்பதையடுத்து, நாடு முழுவதிலும் உள்ள பெண்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

நாட்டின் பெண்கள் ஒவ்வொருதுறையிலும் சாதனை படைத்து வருகிறார்கள். பல ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புகளை பெண்கள் வகித்து வருகின்றனர்.

21-ஆம் நூற்றாண்டில் மனிதகுலத்தின் முன்னேற்றத்துக்கு வழிகாட்டும் அறிவியல் மற்றும் புத்தாக்கத் துறைகளிலும் பெண்களின் பங்கேற்பு அதிகரித்து வருகிறது. கல்வி, இலக்கியம், கலை, இசை, திரைப்படம், நடனம் மற்றும் பாரம்பரியம் ஆகிய துறைகளிலும் பெண்கள் பங்கேற்பு அதிகரித்துள்ளது.

2023-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா வருகின்ற நாடாளுமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்படுவதை நீங்களும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். விரைவில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்ய நாம் அனைவரும் ஒன்றிணைவது மிகவும் அவசியமாகும். 2029-ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தல்களும், அதே ஆண்டில் வரவிருக்கும் பல்வேறு மாநிலச் சட்டப்பேரவைத் தேர்தல்களும், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை முழுமையாகச் செயல்படுத்தப்பட்ட நிலையில் நடைபெற்றால், நமது ஜனநாயகம் மேலும் வலிமைமிக்கதாகவும் துடிப்பானதாகவும் மிளிரும். அந்த நிலையை அடைவதற்கு, நாடாளுமன்றத்தில் தற்போது வரவிருக்கும் இந்தச் சட்ட மசோதா கண்டிப்பாக நிறைவேற்றப்பட வேண்டும்.

இதில் ஏற்படும் கூடுதல் தாமதம் துரதிர்ஷ்டவசமானதாக அமைவதுடன், நாட்டின் பெண்களுக்கு இழைக்கப்படும் ஒரு பெரும் அநீதியாகவும் கருதப்படும். இந்தியப் பெண்களுக்கு உரிமையானவற்றுக்காக முடிவின்றி காத்திருக்குமாறு கோரப்பட முடியாது. நமது சட்டப்பேரவைகளில் பெண்களின் குரல் வலுப்பெறும்போது, மக்களாட்சியின் குரலே வலுப்பெறுகிறது" எனத் தெரிவித்துள்ளார்.

# தன்னை இயேசுவாக சித்தரிக்கும் ஏஐ படத்தை பதிவிட்ட ட்ரம்ப்

**வாஷிங்டன், ஏப்.15:**

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், 12ம் தேதி கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் 14-ம் லியோ பற்றி செய்தியாளர்களிடமும் சமூக வலைதளங்களிலும் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தார். தான் போப்பின் ரசிகர் அல்ல என்றும் அவர் சிறந்த முறையில் செயல்படவில்லை என்றும் கூறினார்.

மேலும் போப் மிகவும் தாராளவாதி என்றும் தீவிர இடதுசாரிகள் என்று அழைப்பவர்கள் மீது அதிக அனுதாபம் கொண்டவர் என்றும் குற்றம் சாட்டினார். குறிப்பாக அமெரிக்கா மற்றும் வெளியுறவுக் கொள்கை தொடர்பான பிரச்சினைகளில் அரசியல் வர்ணனை செய்வதை விடுத்து, போப் தனது ஆன்மிகக் கடமைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் ட்ரம்ப் தெரிவித்தார்.

இந்த விமர்சனம் வெளிவந்த சில மணி நேரங்களுக்குப் பிறகு, செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மூலம் உருவாக்கப்பட்ட தனது படத்தை சமூக வலைதளத்தில் ட்ரம்ப் பதிவிட்டார். அதில் இயேசுவைப் போன்ற தோற்றத்தில் உள்ள அவர், விவிலிய காலத்து அற்புதத்தைச் செய்வது போல சித்தரிக்கப்பட்டிருந்தார்.

அந்த படத்தில், அவர் நீண்ட அங்கிகளை அணிந்து, நோய்வாய்ப்பட்ட ஒரு மனிதன் மீது தனது கையை வைத்திருப்பது போலவும், பார்வையாளர்கள் மரியாதையுடன் பார்த்துக் கொண்டிருக்க



அவரது விரல்களிலிருந்து ஒளி வீசுவது போலவும் காட்டப்பட்டிருந்தது.

இந்தத் தோற்றம், லாசரஸை இயேசு உயிர்த்தெழுப்பிய விவிலியக் கதையை எதிரொலித்தது.

அப்படத்தைச் சுற்றியுள்ள படங்களில் அமெரிக்கக் கொடிகள், ராணுவ விமானங்கள், பறக்கும் கழுகுகள் மற்றும் வானத்தில் தேவதூதர்களின் உருவங்கள் இடம்பெற்றிருந்தன.

போப் பற்றிய விமர்சனத்துக்குப் பிறகு இந்தப் படம் வெளியானதால், இது விரைவாக மக்களின் கவனத்தை ஈர்த்தது.

முன்னதாக, ஈரானுடனான போர் சர்வ வல்லமை கொண்டவர் என்ற மாயையை உருவாக்கும் முயற்சி என்று போப் 14-ம் லியோ விமர்சித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த ட்ரம்ப், எதிரி நாடுகள் அணு ஆயுதங்களைப் பெறுவதை நியாயப்படுத்தும் ஒரு மதத் தலைவரை விரும்பவில்லை என்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் மோடி தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்து!

**சென்னை, ஏப்.14:**

தமிழ்ப் புத்தாண்டு கொண்டாடும் தமிழ்நாட்டு மக்களுக்கு தமிழ் மொழியில் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

விசுவாவசு ஆண்டு முடிந்து பராபவ தமிழ்ப் புத்தாண்டு இன்று தொடங்கியது. இதனையொட்டி, தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். பிரதமர் நரேந்திர மோடியும் தனது எக்ஸ் பக்கத்தில் தமிழ் மொழியில் வாழ்த்துப் பதிவு வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், "புனிதமான புத்தாண்டு தினத்தையொட்டி இனிய நல்வாழ்த்துகள். இந்த ஆண்டு முழுவதும் மகிழ்ச்சியும், வெற்றியும், நல்ல ஆரோக்கியமும் நிறைந்திருக்க நான் பிரார்த்திக்கிறேன்.

சிறப்புமிக்க இந்த நாள் புதுப்பித்தல், நம்பிக்கை மற்றும் புதிய தொடக்கங்களின் கொண்டாட்டமாகும். இது தமிழ்ப் பண்பாட்டின் பெருமையைப் போற்றும் ஒரு தருணமாகும்.

அதன் இலக்கியம், இசை, கலை, தத்துவம், பக்தி ஆகியவற்றின் வளமான பாரம்பரியம் உலகெங்கிலும் உள்ள மக்களுக்குத் தொடர்ந்து உத்வேகம் அளிக்கிறது.

சிறப்புமிக்க இந்த நாள் நமது சமூகத்தில் ஒற்றுமை உணர்வை மேலும் வளர்க்கட்டும். மகத்தான தமிழ்ப் பண்பாட்டால் உத்வேகம் பெற்று, நாம் வெற்றியின் புதிய சிகரங்களை அடைவதோடு, இயற்கையுடனான நமது பிணைப்பையும் ஆழப்படுத்திக் கொள்வோம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்ப் புத்தாண்டு மட்டுமின்றி, ஒடிசாவில் கொண்டாடப்படும் மகா விஷுபபான சங்கராந்தி, பஞ்சாபில் கொண்டாடப்படும் பைசாகி உள்ளிட்டவைகளுக்கும் பிரதமர் மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

# திமுக இருக்கும்வரை தமிழகத்தை பாஜகவால் தொடமுடியாது: முதல்வர் ஸ்டாலின்

**சென்னை, ஏப்.15:**

திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின், திருவள்ளூரில் நேற்று நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசியதாவது: தமிழகத்தின் வடக்கு வாசலாக இருக்கும் திருவள்ளூர் மாவட்டம், மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

பெரும்பாலும் தமிழகத்தின் கிராம தெய்வங்கள் வடக்கு நோக்கிதான் அமர்ந்திருக்கும். ஏனெனில் தமிழகத்துக்கு ஆபத்து எப்போதும் வடக்கில் இருந்துதான் வரும். அப்படி வரக்கூடிய தேசிய ஜனநாயகக் கூட்டணி என்ற ஆபத்தை தடுத்து நிறுத்தக்கூடிய தேர்தல்தான் தற்போதைய தேர்தல்.

ஓராண்டுக்கு முன்பு இதே திருவள்ளூரில் நின்றுதான், மத்திய பாஜக அரசை நோக்கி எத்தனை ஏவல் அமைப்புகளை வேண்டுமானாலும் துணைக்கு அழைத்துக்கொண்டு வாருங்கள்,



தமிழகம் என்றைக்கும் டெல்லிக்கு 'அவுட் ஆப் கன்ட்ரோல் தான்' என்று சவால் விட்டேன்.

அந்த சவாலில் தமிழகம் வெற்றி பெறவேண்டும். அதற்கு திமுக கூட்டணி, சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற்று, திராவிட மாடல் 2.0 ஆட்சியை அமைத்தே ஆக வேண்டும்.

முந்தைய அதிமுக ஆட்சியின் திறனற்ற நிர்வாகத்தால் பொதுமக்கள் பல்வேறு இன்னல்களைச் சந்தித்தனர். தனக்கு பதவி கொடுத்தால் போதும், சம்பந்திக்கு ரெய்டு நடக்காமல் இருந்தால் போதும் என்று இருக்கிறார் பழனிசாமி.

இதற்காக அவர் கொடுத்த விலைதான் தமிழகத்தின் உரிமைகள். பழனிசாமி என்ற அடிமை இருக்கும் தைரியத்தில் அதிமுகவை வைத்து தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி நடத்துவோம், இந்தியை திணிக்கும் மும்மொழித் திட்டத்தை செயல்படுத்துவோம் என, பாஜகவினர் இஷ்டத்துக்கு பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் கொட்டத்தை அடக்கவேண்டும். அடிமைகளை விரட்ட வேண்டும். அதற்கு வாக்காளர்கள் தயாராக இருக்கவேண்டும். பழனிசாமி ஆட்சியில் தமிழகத்தின் வளர்ச்சி 0.07 சதவீதம்தான்.

ஆனால், இன்று தமிழகத்தின் வளர்ச்சி 11.19 சதவீதம். இந்தியாவுக்கே ரோல் மாடல் தமிழகம் என்று தலைநிமிர்ந்து சொல்லும் அளவுக்கு ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஆவடி, வீராபுரத்தில், அரிய வகை முகச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட சிறுமி டானியாவை என் குழந்தைபோல் கவனித்து பெரிய அறுவை சிகிச்சை செய்து, அவர் முகத்தில் அழகான புன்னகை தோன்றுவதைக் கண்டு இன்றைக்கும் நான் மகிழ்ச்சியடைந்து வருகிறேன்.

ஒவ்வொரு செயலிலும் தமிழகத்தை முன்னோக்கி அழைத்து கொண்டு போக வேண்டுமென தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறேன். நமது மாநிலம் பலரின் கண்களை உறுத்துகிறது.

பெயரைக்கூட தமிழ்நாடு என்று கூறக்கூடாது. தமிழகம் என்றுதான் அழைக்கவேண்டும் என்று சொன்னார்கள். பெயரை மட்டுமல்ல; நாங்கள் நினைத்தால் தமிழகத்தையே இரண்டாக உடைப்போம் என்று பாஜகவினர் திமிராகப் பேசினர். அவர்களுக்கு சவால் விட்டு சொல்கிறேன்.

இந்த ஸ்டாலின் உயிரோடு இருக்கும்வரை, திமுக இருக்கும்வரை பாஜகவால் தமிழகத்தை தொட்டுக்கூட பார்க்க முடியாது. இவ்வாறு அவர் பேசினார்.



## வேலூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நடந்து சென்று பிரசாரம்



**வேலூர், ஏப்.15:** திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து இன்று காலை வேலூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நடந்து சென்று வாக்கு சேகரித்தார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி திமுக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தமிழகம் முழுவதும் சூறாவளி பிரசாரம் செய்து வருகிறார். கடந்த 31ம்தேதி திருவாரூரில் பிரசாரத்தை தொடங்கிய அவர், தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் அனல்பறக்கும் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

5ம் கட்ட பிரசாரத்தை நேற்று மாலை திருவள்ளூரில் தொடங்கினார். தொடர்ந்து நேற்றிரவு 7 மணிக்கு ராணிப்பேட்டைமாவட்டத்தில் உள்ள 4 தொகுதிகளில் போட்டியிடும் திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து அம்மூர் சாலையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசினார். பின்னர் ஆற்காட்டில் நடந்து சென்று பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். அங்கிருந்து கார் மூலம் வேலூர் வந்தார். இங்குள்ள தனியார் ஓட்டலில் இரவு தங்கினார். முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை 7 மணியளவில், வழக்கமான நடைபயிற்சியில் ஈடுபட்டார். இதற்காக வேலூரில் இருந்து கே.வி.குப்பத்திற்கு சென்றார். அங்குள்ள ஜெகஜீவன் ராம் நகரில் நடைபயிற்சிக்கு சென்று அங்கு திரண்டிருந்த பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்.

பின்னர் அம்பேத்கர் புதுதெரு வழியாக நடைபயிற்சி சென்றார். அப்போது முதல்வருக்கு, பொதுமக்கள், இளைஞர்கள் என பல்வேறு தரப்பினரும் கை குலுக்கி உற்சாக வரவேற்பு அளித்தனர். பலர், முதல்வருடன் ஆர்வமுடன் செல்பி எடுத்து மகிழ்ந்தனர். அதேபோல் பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர். அப்பகுதியில் அம்பேத்கர் சிலை அருகே வைக்கப்பட்டிருந்த அவரது உருவபடத்திற்கு, முதல்வர் ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் பஜார் பகுதிக்கு சென்று வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் கே.வி.குப்பம் தொகுதி திமுக வேட்பாளர் ராஜேஸ்வரிக்கு ஆதரவாக முதல்வர் வாக்கு சேகரித்தார். தொடர்ந்து அங்குள்ள ஒரு டீ கடைக்கு சென்று டீ குடித்தார். இதையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் நடை பயிற்சியை முடித்துக்கொண்டு மீண்டும் தனியார் ஓட்டலுக்கு சென்று ஓய்வெடுத்தார்.

## சமயபுரம் மாரியம்மன் கோயில் சித்திரை தேரோட்டம் கோலாகலம்



**திருச்சி, ஏப்.15:** பிரசித்தி பெற்ற சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில் சித்திரை தேரோட்டம் இன்று கோலாகலமாக நடைபெற்றது.

சக்தி தலங்களில் முதன்மையாக விளங்கும் திருச்சி மாவட்டம், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலில் நிகழாண்டு சித்திரை தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

முன்னதாக இக்கோயிலில் சித்திரைப் பெருந்திருவிழா ஏப்.5 அன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. தொடர்ந்து தினந்தோறும் பல்வேறு வாகனங்களில் அம்மன் வீதிஉலா வந்தார்.

விழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டம் நேற்று நடைபெற்றது. காலை 10.31 மணிக்கு மேல் 11.30 மணிக்குள் மிதுன லக்னத்தில் சிறப்பு அலங்காரத்தில் மேளதாளங்கள் முழங்க, வாண வேடிக்கைகளுடன் திருத்தேரில் அம்மன் எழுந்தருளினார். இதையடுத்து அங்கு திரண்டிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஓம் சக்தி பராசக்தி என்ற கோஷங்களுடன் திருத்தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

தேரோடும் வீதிகளில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூட்டத்தின் நடுவே ஆடி அசைந்தபடி வலம் வந்த தேர் மாலை 4 மணியளவில் நிலையை அடைந்தது. தேரில் எழுந்தருளி காட்சியளித்த அம்மனை வழிநெடுக பக்தர்கள் பக்தி பரவசத்துடன் தரிசனம் செய்தனர்.

## ‘தொகுதி மறுவரையறையால் தமிழ்நாட்டில் எம்.பி.க்களின் எண்ணிக்கை 59ஆக உயரும்’ - அண்ணாமலை



**சென்னை, ஏப்.15:** 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதிகளை மறுவரையறை செய்து, 2029 நாடாளுமன்றத் தேர்தலை புதிய தொகுதி அமைப்பின்படி நடத்த மத்திய பா.ஜ.க. அரசு முடிவு செய்துள்ளது.

உயர்த்தப்படவுள்ள 816 தொகுதிகளில் 273 தொகுதிகளை (33%) பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான சட்டத்திருத்த மசோதாக்களைத் தாக்கல் செய்ய ஏப்ரல் 16 முதல் 18 வரை நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வு கூட்டப்பட உள்ளது. இதற்காக பா.ஜ.க. தனது எம்.பி-க்களுக்கு கட்டாய வருகைக்கான கொறடா உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதனிடையே இந்த தொகுதி மறுவரையறையால், மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறையும் என்றும், இது கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது என்றும் எதிர்க்கட்சிகள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் இதுதொடர்பாக பேசியுள்ள பா.ஜ.க. முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை, “மக்கள்தொகை அடிப்படையில் மறுவரையறை செய்திருந்தால் தமிழ்நாட்டில் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 39 தொகுதிகளில் இருந்து 31 தொகுதிகளாக குறைந்திருக்கும். 8 எம்.பி.க்களை இழந்திருப்போம்.

ஒவ்வொரு மாநிலத்திலும் தொகுதிகளை 50% உயர்த்த உள்ளதாக முதல்கட்டமாக தெரியவந்துள்ளது. இது குறித்து அதிகாரப்பூர்வமாக நாடாளுமன்றத்தில் நம்முடைய தலைவர்கள் தெரிவிப்பார்கள்.

அப்படி இருக்கையில் தமிழ்நாட்டின் எம்.பி.க்களின் எண்ணிக்கை 39-ல் இருந்து 59 வரை உயர வாய்ப்பு இருக்கிறது. கேரள மாநிலத்தில் 20-லிருந்து 30 வரை செல்வதற்கு வாய்ப்புள்ளது. மக்கள்தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்யாமல், அனைவரையும் ஒரு மனதோடு, ஒரு நேர்க்கோட்டுப் பாதையில் மத்திய அரசு எடுத்துச் செல்ல நினைக்கிறது.

எதற்காக பொய்யைக் கூறி அச்சத்தையும், பயத்தையும் முதலமைச்சர் உருவாக்குகிறார்?” என கேள்வி எழுப்பினார்.

## திடீர் உடல்நலக்குறைவு
## நடிகர் மன்சூர் அலி கான் மருத்துவமனையில் அனுமதி



**சென்னை, ஏப்.15:** தமிழ்நாடு சட்டசபை தேர்தல் வருகிற 23-ஆம் தேதி நடைபெறுகிறது. தேர்தலை ஒட்டி அரசியல் கட்சிகள் முழு வீச்சில் பரப்புரை செய்து வருகின்றன.

இந்த நிலையில், பரப்புரையின் போது உடல்நலக்குறைவு ஏற்பட்டு வேட்பாளர்கள் சிலர் சிகிச்சை பெற்று வருகின்றனர். முன்னதாக பா.ஜ.க. சார்பில் வானதி ஸ்ரீனிவாசன் உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுதவிர தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் மயங்கி விழுந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்து வருகிறார். இந்த வரிசையில், லால்குடி தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக களமிறங்கி இருக்கும் நடிகர் மன்சூர் அலி கான் உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் நெருங்கி வருவதை ஒட்டி கடந்த சில வாரங்களாக லால்குடியில் முகாமிட்டுள்ள மன்சூர் அலி கான் சந்தைக்கு சென்று மக்களை சந்திப்பது, காய்கறி வாங்குவது, பொது மக்கள் வீடுகளுக்கு சென்று அமர்ந்து பேசுவது என தொடர்ச்சியாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வந்தார்.

இந்த நிலையில், நடிகர் மன்சூர் அலி கானுக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மன்சூர் அலி கானுக்கு ஐ.சி.யூ.வில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## தாம்பரம் தொகுதியில் தகிக்கும் வெயிலிலும் தளராத பிரச்சாரம்




**தாம்பரம், ஏப்.15:** சென்னையின் நுழைவு வாயிலான தாம்பரம் தொகுதியை தனதாக்கும் வகையில் அரசியல் கட்சிகள் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வருகின்றன.

இங்கு திமுக, அதிமுக, நாம் தமிழர் கட்சி, தமிழக வெற்றிக் கழகம் உள்ளிட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் உட்பட 15 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

**திமுக - மருத்துவர் ஆர். எஸ்.கிருத்திகா தேவி**

தாம்பரம் தொகுதியில் பல்வேறு இடங்களில் திமுக வேட்பாளர் கிருத்திகா தேவி, கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுடன் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.


திமுக அரசின் ஐந்தாண்டு சாதனை திட்டங்கள் குறித்தும், தேர்தல் வாக்குறுதிகளை எடுத்துக் கூறியும் பிரச்சாரம் செய்தார்.

என்னை எம்எல்ஏ.வாக தேர்ந்தெடுத்தால் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து பிரச்சினைகளைக் கேட்டறிந்து தீர்வுகாண பாடுபடுவேன் என உறுதியளித்து பிரச்சாரம் செய்கிறார்.

**அதிமுக - சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன்**

கூட்டணிக் கட்சியினர் புடைசூழ பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் அதிமுக வேட்பாளர் சிட்லபாக்கம் ராஜேந்திரன், அதிமுக ஆட்சி அமைந்தவுடன் வீடு இல்லாதோருக்கு வீடு மற்றும் வீட்டுமனை பட்டா வழங்கப்படும்.

## கோடை விடுமுறை: பக்தர்கள் குவிவதால் திருப்பதி கோவிலில் வி.ஐ.பி. பிரேக் தரிசனம் ரத்து 8 மணி நேரத்தில் தரிசனம் செய்யலாம்



**திருப்பதி, ஏப்.15:** திருப்பதி தேவஸ்தானம் கோடை விடுமுறையை கருத்தில் கொண்டு பக்தர்கள் விரைந்து தரிசனம் செய்வதற்கான ஏற்பாடுகளை தயாரித்து வருகிறது. அதன்படி கடந்த 3 ஆண்டுகளாக கோடை காலத்தில் மே, ஜூன், ஜூலை மாதங்களில் தரிசனத்திற்கு வந்த பக்தர்களின் புள்ளி விவரத்தை சேகரித்து உள்ளனர்.

வி.ஐ.பி தரிசனத்திற்கு தினமும் 2 மணி நேரம் முதல் 3 மணி நேரம் வரை ஒதுக்கப்படுகிறது. இந்த நேரத்தில் 3,800 பேர் மட்டுமே தரிசனம் செய்கின்றனர். அந்த 3 மணி நேரத்தை சாதாரண பக்தர்களுக்கு ஒதுக்கினால் 15 ஆயிரம் பக்தர்கள் வரை தரிசனம் செய்ய முடியும். எனவே வி.ஐ.பி பிரேக் தரிசனம் மற்றும் இலவச தரிசன நேர ஒதுக்கீடு முறையை ரத்து செய்ய தேவஸ்தானம் முடிவு செய்துள்ளது.

வைகுண்ட ஏகாதசி நாட்களில் பக்தர்கள் நேரடியாக தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். அதேபோல் கோடைக் காலத்திலும் வைகுண்ட ஏகாதசி நடைமுறையை பின்பற்ற முடிவு செய்துள்ளனர். இதன் மூலம் தரிசனத்திற்கு வரும் சாதாரண பக்தர்கள் 8 மணி நேரம் முதல் 12 மணி நேரத்தில் தரிசனம் செய்ய முடியும். தினமும் 80 ஆயிரம் பக்தர்கள் தரிசனம் செய்யலாம்.

திருப்பதியில் நேற்று 72,724 பேர் தரிசனம் செய்தனர். 31,786 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். ரூ.4.59 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது. நேரடி இலவச தரிசனத்தில் வந்த பக்தர்கள் 18 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்தனர்.

## “திமுக அரசை தூக்கி எறிய வேண்டிய கடமை மகளிருக்கு இருக்கிறது” - ஜி.கே.வாசன்



**ஒட்டன்சத்திரம், ஏப்.15:** “தமிழகத்தில் கொலை, கொள்ளை, திருட்டு, பாலியல் தொல்லை அதிகரித்துள்ளது. மகளிருக்கு பாதுகாப்பு கொடுக்க முடியாத திமுக அரசை தூக்கி எறிய வேண்டிய கடமை மகளிருக்கு இருக்கிறது” என்று தமாகா தலைவர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில் அதிமுக கூட்டணி சார்பில் போட்டியிடும் தமாகா வேட்பாளர் விடியல் எஸ். சேகரை ஆதரித்து, அக்கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் செவ்வாய்கிழமை (ஏப்.14) காலை பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அப்போது அவர் பேசுகையில், “மக்கள் விரோத, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மக்களின் கழுத்தை அறுத்த திமுக அரசை வீட்டிற்கு அனுப்ப வேண்டியது அவசியம்.

அவர்களுக்கு தண்டனை ஆட்சி மாற்றத்தை கொடுப்பது தான். விலைவாசி உயர்வு, குப்பைக்கு வரி என மக்களின் மீது சுமையை அதிகரித்தது திமுக அரசு. மகளிர் நாட்டினுடைய கண்கள். ஆனால், மகளிருக்கு தமிழகத்தில் பாதுகாப்பில்லை. தமிழகத்தில் கொலை, கொள்ளை, திருட்டு, பாலியல் தொல்லை அதிகரித்துள்ளது. மகளிருக்கு பாதுகாப்பு கொடுக்க முடியாத திமுக அரசை தூக்கி எறிய வேண்டிய கடமை மகளிருக்கு இருக்கிறது.

## ஆவடி தொகுதியில் அரியணைக்காக மல்லுகட்டும் கட்சிகள்



**ஆவடி, ஏப்.15:** சட்டப்பேரவை தேர்தல் களம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், ஆவடி தொகுதியில் திமுக, பாஜக, நாம் தமிழர் கட்சி, தமிழக வெற்றிக்கழகம் ஆகிய பிரதான கட்சி வேட்பாளர்களிடையே கடும் போட்டி நிலவி வருகிறது. இவர்களுடன் பகுஜன் சமாஜ் கட்சி, தவாக மற்றும் 10 சுயேச்சைகள் உட்பட மொத்தம் 20 பேர் களத்தில் உள்ளனர்.

**திமுக - அமைச்சர் சா.மு.நாசர்**

தமிழக அமைச்சரும் திமுக வேட்பாளருமான சா.மு.நாசர், கடந்த 5 ஆண்டுகளில் ஆவடியில் மட்டும் 81 ஆயிரம் பட்டாக்கள் வழங்கப்பட்டது உட்பட திமுக அரசின் சாதனைகளையும், தேர்தல் வாக்குறுதிகளையும் பட்டியலிட்டு ஆதரவு திரட்டி வருகிறார்.

திருநின்றவூர் ஈசா ஏரியை ரூ.100 கோடியில் புனரமைக்க நடவடிக்கை, சாலைகள் சரிசெய்து கொடுக்கப்படும் என்பன உள்ளிட்ட வாக்குறுதிகளையும் அளித்து வருகிறார்.

**பாஜக - மகேந்திர ராஜசிம்மா**

அதிமுக கூட்டணியில் போட்டியிடும் பாஜக வேட்பாளரான மகேந்திர ராஜசிம்மா, திமுகவின் ஆட்சியில் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டியும், தொகுதியில் நிலவும் பிரச்சினைகளைப் பட்டியலிட்டும் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

## ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.10,000; திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம்: பாஜக தேர்தல் வாக்குறுதி




**சென்னை, ஏப்.15:** தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலுக்கான பாஜக தேர்தல் அறிக்கையை ஒன்றிய அமைச்சர் ஜெ.பி.நட்டா வெளியிட்டார். ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல், பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர். சென்னை கிண்டி நட்சத்திர ஓட்டலில் புதிய யுகம் படைக்கும் தாமரை வாக்குறுதி 2026" என்ற தலைப்பில் பாஜகவின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

*தே.ஜ.கூட்டணி ஆட்சிக்கு வந்தால் குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.2,000 வழங்கப்படும் -பாஜக வாக்குறுதி

* ஆண்டுக்கு 3 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும். தமிழ்ப் புத்தாண்டு, பொங்கல், தீபாவளி பண்டிகைகளுக்கு இலவச எரிவாயு சிலிண்டர் வழங்கப்படும்

## “நிதியமைச்சர் பதவியிலிருந்து கீழே இறக்கப்பட்டது ஏன்?” பழனிவேல் தியாகராஜனுக்கு சுந்தர் சி கேள்வி



**சென்னை, ஏப்.15:** வெளிநாட்டில் தலைமறைவாக சுற்றிக்கொண்டிருக்கிறாரே லட்சுமணன், அவர் யாருடைய ஆள்? இதற்கெல்லாம் பதில் சொல்லாமல் என்னை பற்றி தனி நபர் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறார்.

கபடதாரி, பச்சோந்தி, சினிமா சங்கி என்று என்னைப் பற்றி கூறுகிறார். என்னை கூத்தாடி என்கிறீர்கள். உங்கள் துணை முதல்வர் உதயநிதி, சினிமாவில் இருந்துதான் அரசியலுக்கு வந்துள்ளார். உங்களுக்கு தைரியம் இருந்தால் அவரை பார்த்து சொல்லுங்கள்.

வார்த்தைக்கு வார்த்தைக்கு படித்தவன், படித்தவன் என்று சொல்லிட்டு என்னை படிக்காதவன் என்று இகழ்கிறார். காமராஜர், எம்ஜிஆர், ஜெயலலிதா படிக்கவில்லை. ஏன் உங்கள் தலைவர் கருணாநிதிகூட படிக்கவில்லை. படிப்பு ஒருவரின் திறமையையும், தகுதியையும் நிர்ணயித்துவிடாது. ஒருவரின் செயல்பாடுகளும், நடத்தையையும்தான் அவரது தகுதியை நிர்ணயிக்கும். இதுவரை உங்களை எதிர்த்து போட்டியிட்ட வேட்பாளர்கள் கேள்விகளுக்கு பதில் சொல்லாத நீங்கள், இப்போது எனக்கு மட்டும் ஏன் பதில் சொல்கிறீர்கள். ஏன் என்றால், நான் கேட்பது என்னுடைய கேள்வி அல்ல.

அது மதுரை மக்கள் உங்களை நோக்கி வைக்கும் கேள்விகள். படித்தவர், படித்தவர் என்று சொல்கிறீர்கள், பிறகு எதற்கு உங்களை நிதியமைச்சர் பதவியில் இருந்து தூக்கி சாதாரண துறைக்கு மாற்றினார்கள். அதற்கு பதில் இருக்கிறதா உங்களிடம்? ஏன் உங்களுக்கு தகுதியில்லை என்பதாலா?

ஒரு நிதிமைச்சராக, தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சராக ஐந்து ஆண்டுகள் இருந்துவிட்டு தொகுதிக்கு பெரிய திட்டங்களை கொண்டு வராமல் என்னை திட்டுகிறார்.


திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
• Location: (Nr Mylapore Jn)
• Direction: N/ Face
• Total Area: 2400 sft
• Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner
www.vgpdevelopers.com


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED:
FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home (Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


! WANTED !
Muslim Lady
Accounts Assistant
Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet
Contact: 99401 46318


WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF (Male & Female)
MARKETING EXECUTIVE – ELECTRICAL FIELD (Male & Female)
ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology – Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


WANTED
ஆட்கள் தேவை
சமையல்
வீட்டுவேலை
குழந்தை
நோயாளி
தங்கி
தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்
தொடர்புக்கு 8148215778 8248610592
A trustworthy help service for Chennai families


GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய் ₹ 1.80 லட்சம்
800 SQFT
FREE FREE!!!
10 கிராம் GOLD COIN சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118


ATTENTION
ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE
தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.


குன்றத்தூரில்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெளிமுக்கு வருளன்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா பாக்கு
தீபாவளி
அஜந்தா
RAVIKUMAR AND COMPANY


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


THANIGAI
WANTED ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
☑ Flexible work ☑ No Age Limit /No Investment
☑ No Experience/No Qualification ☑ No Risk / No Target
Simple work – just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy 90879 55111


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872



# கவிதை அரங்கம்!



பிரிவு என்பது முடிவல்ல,
மீண்டும் உன்னைச்
சந்திப்பதற்கான
தொடக்கம்.


நீ இல்லாத ஒவ்வொரு
நொடியும், ஒரு யுகமாக
மெல்ல நகர்கிறது.

ஜன்னல் ஓரம் அமர்ந்து,
உன் வருகைக்காக
வானத்தைப் பார்க்கிறேன்.

உன் நினைவுகள் தான்,
நான் சுவாசிக்கும் காற்றில்
கலந்திருக்கிறது.

தனிமை என்பது கொடியது,
உன் நினைவுகள் துணை
இல்லையென்றால்.

# வாழ்க்கை தத்துவம்...



உன்னை வெறுப்பவர்களை
நினைத்துக் கவலை
கொள்ளாதே அவர்களுக்கு
உன் அன்பை பெற
தகுதி இல்லை
என நினைத்துக்கொள்

மாற்றி யோசனை
செய்யாமல் மாற்றங்கள்
வருவதில்லை

தேவை என்பதற்காக
ஒருவரை நேசிக்காதீர்கள்
தேவையில்லை என்பதற்காக
ஒருவரை வெறுக்காதீர்கள்

# மணம்

மார்கழி மாதத்துக் குளிர் காற்று மேட்டுப்பாளையம் சாலையெங்கும் இதமாகப் பரவியிருந்தது. அதிகாலை ஐந்து மணிக்கே பெரியநாயக்கன்பாளையம் தாண்டி, காரமடை ரங்கநாதர் கோவில் வாசலில் நான் நின்றிருந்தேன். கல்லூரியில் படிக்கும் காலம் அது. என் நண்பன் ரமேஷின் அக்கா கல்யாணத்திற்காக முதல் நாள் இரவே அங்கு சென்றுவிட்டோம்.

கோவில் விசேஷம் என்பதால் ஊரே களைகட்டியிருந்தது. ரமேஷின் அப்பா, "தம்பி, நீயும் ரமேஷும் கொஞ்சம் அந்தப் பூக்கடைத் தெருவுக்குப் போய், சாமிக்குத் தொடுத்த மாலைகளையும், கல்யாண மண்டபத்துக்குத் தேவையான மல்லிகைப் பூச்சரங்களையும் வாங்கிட்டு வந்துடுறீங்களா?" என்றார்.

நானும் ரமேஷும் ஒரு பழைய ஸ்கூட்டரில் கிளம்பினோம். காரமடையின் அந்தச் சிறிய சந்துக்குள் இருந்த பூச்சந்தையில் நுழைந்தபோது, மூக்கைத் துளைக்கும் மல்லிகை மற்றும் மருகு வாசம். அங்கே ஒரு சிறிய ஓட்டு வீட்டின் முன் வரிசையாகப் பெண்கள் அமர்ந்து பூத் தொடுத்துக் கொண்டிருந்தார்கள். "அண்ணே, ரங்கசாமி கவுண்டர் வீட்டு விசேஷத்துக்குச் சொன்ன பூ ரெடியா?" என்று ரமேஷ் கேட்டான்.

உள்ளிருந்து ஒரு குரல் கேட்டது, "இதோ முடிஞ்சுதுங்க தம்பி... மல்லி மட்டும் இன்னும் ரெண்டு முழம் கட்டணும், ஒரு நிமிஷம் இருங்க" என்று சொல்லிக்கொண்டே வெளியே வந்தாள் ஒரு பெண். அவளுக்குச் சுமார் இருபது வயது இருக்கலாம். நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு, தலையில் ஒரு முழம் கனகாம்பரம். அவள் பெயர் பாக்கியம் என்று ரமேஷ் மெல்லிய குரலில் சொன்னான். பாக்கியம் மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்துகொண்டிருந்தாள். கைகள் இயந்திரம் போல பூக்களைத் தொடுக்க, கண்கள் மட்டும் அவ்வப்போது எங்களைப் பார்த்து ஒரு மரியாதையான புன்னகையைச் சிந்தின. இடையில், தெருவில் சென்ற ஒரு முதியவர் தடுமாறியதைப் பார்த்ததும், கையில் இருந்த பூச்சரத்தை அப்படியே வைத்துவிட்டு ஓடிப்போய் அவரைப் பிடித்து திண்ணையில் உட்கார வைத்தாள். "தாத்தா, காலையிலேயே எங்க கிளம்பிட்டீங்க? இருங்க காபி கொண்டு வர்றேன்" என்று உள்ளே ஓடினாள்.

அவளது அந்த ஓயாத உழைப்பும், அடுத்தவர் மீது காட்டும் அக்கறையும் எனக்குள் ஒரு பெரிய மரியாதையை உருவாக்கியது. பூக்களை வாங்கிக்கொண்டு கிளம்பும்போது, ரமேஷ் அவளிடம், "பாக்கியம், நாளைக்குக் கல்யாணத்துக்கு நீயும் உன் தம்பியும் கண்டிப்பா வரணும், மறந்துடாதே" என்றான்.

மறுநாள் கல்யாண மண்டபம். கூட்டம் அலைமோதியது. நான் பந்தியில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்போது அங்கே இலை எடுக்கவும், தண்ணீர் வைக்கவும் ஒரு பெண் ஓடிக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். அது பாக்கியம் தான். கல்யாணத்திற்கு விருந்தினராக வந்தவள், அங்கே வேலை ஆட்கள் குறைவாக இருப்பதைப் பார்த்துவிட்டு, தானாகவே முன்வந்து உதவி செய்துகொண்டிருந்தாள். கல்யாணம் முடிந்து கிளம்பும் நேரம். ரமேஷின் அப்பா எல்லாருக்கும் தாம்பூலப் பை கொடுத்துக் கொண்டிருந்தார். பாக்கியம் கிளம்பத் தயாரானாள். அப்போது ரமேஷின் அப்பா என்னைக் கூப்பிட்டு, "தம்பி, இந்தப் பொண்ணு பாக்கியம் நேத்து முழுக்க நமக்காக விழிச்சுப் பூத் தொடுத்துக் கொடுத்தா. இன்னைக்கும் இங்க வந்து எல்லா வேலையும் செஞ்சு கொடுத்திருக்கா. இந்தாங்க பாக்கியம், இது உங்களுக்கான அன்பளிப்பு" என்று ஒரு பட்டுப்புடவையும், கொஞ்சம் பணமும் அடங்கிய தட்டை என்னிடம் கொடுத்து, "நீயே கொடு தம்பி, படிச்ச பையன் கைராசியானவன்" என்றார்.

நான் அந்தத் தட்டை நீட்டினேன். பாக்கியம் அந்தத் தட்டை வாங்கிக்கொண்டு, சட்டென்று குனிந்து என் கால்களைத் தொட்டு வணங்கினாள்.

நான் அப்படியே உறைந்து போய்விட்டேன். பதற்றத்தில் பின்வாங்கினேன். "ஐயோ... என்னங்க இது? நான் உங்க வயசுல சின்னவன். நீங்க ஏன் என் கால்ல விழுறீங்க?" என்று படபடப்புடன் கேட்டேன்.

பாக்கியம் நிமிர்ந்து அந்தத் தூய்மையான சிரிப்போடு சொன்னாள், "தம்பி, நீங்க படிச்சவங்க. உங்களை மாதிரி அறிவாளிங்க கையால இதைப் பெறறது எனக்குப் பெருமை. வயசு என்ன தம்பி இருக்கு? கொடுக்கிற கைக்கு எப்பவும் மரியாதை உண்டுங்க."

அந்த நிமிடம் எனக்குப் புரிந்தது. படிப்பு, பணம், பதவி எதைவிடவும், அடுத்தவருக்கு உதவும் அந்தப் பெரிய மனமும், பணிவும் தான் ஒருவரை உயர்ந்த இடத்தில் வைக்கிறது என்று. அந்த மல்லிகைப் பூவின் வாசத்தை விட, பாக்கியத்தின் அந்தப் பண்பு என் மனதில் நீண்ட காலம் மணக்கத் தொடங்கியது.



**வெ நாராயணன்**
லால்குடி

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



**கேள்வி:** சிங்கம் ஏன் காட்டோட ராஜா?

**பதில்:** ஏன்னா, அதுகிட்ட 'சிங்க' கார்டு (SIM CARD) இருக்கு!

**கேள்வி:** தேங்காய் ஏன் மேல இருந்து விழுது?

**பதில்:** ஏன்னா, அதுக்கு 'லிஃப்ட்' கேட்கத் தெரியாது!



# தினம் ஒரு சமையல்



## பசலைக்கீரை கடைசல்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| 100 கிராம் | -பசலைக்கீரை |
| 3 | -பச்சை மிளகாய் |
| 2 டேபிள் ஸ்பூன் | -சாம்பார் வெங்காயம் |
| 1/4 டீஸ்பூன் | -சீரகம் |
| 1/4 டீஸ்பூன் | -தனியா |
| 2 டேபிள் ஸ்பூன் | -பால் ஆடை |
| தேவையான அளவு | -உப்பு |
| 2 டேபிள் ஸ்பூன் | -நெய் |

**செய்முறை:**

பசலைக்கீரையின் இலைகளை மட்டும் பிரித்து எடுத்து,தண்ணீரில் நன்கு கழுவி வடித்து எடுத்து வைத்துக்கொள்ளவும்.



வெங்காயத்தை நறுக்கி,தனியா,சீரகம்,பால் ஆடை எல்லாம் எடுத்து தயாராக வைக்கவும்.

ஒரு பாத்திரத்தை ஸ்டவ்வில் வைத்து தண்ணீரை ஊற்றி கொதித்ததும்,மூன்று பச்சை மிளகாயை சேர்த்து வேகவைக்கவும்.

பின்னர் சுத்தம் செய்து வைத்துள்ள கீரையை சேர்த்து ஒரு நிமிடம் வேகவைக்கவும். அதிகம் விட்டால் கலர் மாறி விடும். உடனே எடுத்து தண்ணீரை வடித்துவிட்டு பௌலில் வைக்கவும்.

ஒரு கடாயை ஸ்டவ்வில் வைத்து நெய் சேர்த்து சூடானதும் நறுக்கி வைத்துள்ள வெங்காயம், தனியா,சீரகம் சேர்த்து வதக்கவும்.

வறுத்த வெங்காயத்தை எடுத்து கீரை வைத்துள்ள பௌலில் சேர்க்கவும்.

சூடு ஆறியவுடன் எடுத்து மிக்ஸி ஜாரில் சேர்த்து,பால் ஆடை, உப்பு சேர்த்து விழுதாக அரைத்து எடுத்தால் பசலைக்கீரை கடைசல் தயார்.

தயாரான கீரை கடைசலை எடுத்து ஒரு பௌலில் சேர்த்து,அதன் மேல் ஒரு ஸ்பூன் நெய் சேர்த்து வைத்தால் மிகவும் சுவையான, சத்தான பசலைக்கீரை கடைசல் தயார்.

# அரத்தை பயன்கள்



அரத்தை (குறிப்பாக சிற்றரத்தை) கப நோய்களை நீக்கும் மிகச்சிறந்த மருத்துவ மூலிகையாகும். இது சளி, இருமல், தொண்டை கரகரப்பு, ஆஸ்துமா மற்றும் மூச்சுக்குழாய் அழற்சியை குணப்படுத்துகிறது. மேலும், மூட்டு வலி, செரிமானக் கோளாறுகள், வயிற்றுப் புண் மற்றும் வாத நோய்களுக்கு சிறந்த மருந்தாக செயல்படுகிறது.

அரத்தையின் முக்கிய மருத்துவப் பயன்கள்:

சுவாச ஆரோக்கியம்: "அரத்தை அறுக்காத கபத்தை யார் அறுப்பார்" என்ற பழமொழிக்கு ஏற்ப, தொண்டையில் தங்கியுள்ள சளி, கபம் மற்றும் நாள்பட்ட இருமலை குணமாக்கும்.

சளி மற்றும் காய்ச்சல்: சளி, இருமல், தொண்டை கரகரப்பு மற்றும் தொண்டைப் புண்ணை போக்க உதவுகிறது.

செரிமானம் மற்றும் வயிற்று நோய்: வயிற்று வலி, செரிமானக் கோளாறுகள், குடல் வாயு, வாந்தி மற்றும் வயிற்றுப் புண்ணைக் குணப்படுத்தும்.

வாத நோய்கள்: முடக்குவாதம், மூட்டு வீக்கம் மற்றும் வாத நோய்களுக்கு சிறந்த நிவாரணம் தருகிறது.

இதய ஆரோக்கியம் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி: உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும், கிருமிநாசினியாகவும், ஆன்டி-ஆக்ஸிடன்ட் பண்புகள் மூலமும் உடலை பாதுகாக்கிறது.

வாய் துர்நாற்றம்: வாயில் ஏற்படும் துர்நாற்றத்தைப் போக்க, சிறிதளவு அரத்தையை வாயிலிட்டு மெல்லலாம்.

பயன்படுத்தும் முறை:

அரத்தையை இடித்தோ அல்லது தூளாக்கியோ தேனுடன் கலந்து உட்கொள்ளலாம். கஷாயம் செய்தும் பருகலாம்.

குறிப்பு: இந்தத் தகவல் பொதுவான மருத்துவப் பயன்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது. கடுமையான பாதிப்புகளுக்கு மருத்துவரை அணுகுவது நல்லது.

# உறையவைக்கும் குளிர்! 'MR. X' படப்பிடிப்பில் அந்த ஒரு காட்சி வேறலெவல்.! - ஆர்யா ஓபன்டாக்



ஆர்யா, கௌதம் கார்த்திக், மஞ்சு வாரியர், சரத்குமார் உள்ளிட்ட பல முன்னணி நட்சத்திரங்கள் இணைந்து நடித்துள்ள 'Mr. X' திரைப்படம் ரசிகர்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. மனு ஆனந்த் இயக்கத்தில் உருவாகியுள்ள இப்படம், ஏப்ரல் 17ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாக உள்ளது. திபு நினன் தாமஸ் இசையமைத்துள்ளதால், படத்தின் பின்னணி இசையும் பாடல்களும் பெரும் கவனம் பெற்றுள்ளன.

இந்த நிலையில், படப்பிடிப்பின் போது ஏற்பட்ட அனுபவங்களை பற்றி ஆர்யா பகிர்ந்துள்ளார். குறிப்பாக, நீருக்கடியில் எடுத்த காட்சி தான் தனது வாழ்க்கையில் மிகவும் சவாலான அனுபவமாக இருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

சுமார் 20 அடி ஆழமுள்ள கடும் குளிரான நீரில் நீண்ட நேரம் மூச்சை பிடித்து நடித்தது உடல் மற்றும் மன வலிமையை சோதித்ததாகவும் கூறினார். அந்த காட்சிக்காக பல முறை பயிற்சி மேற்கொண்டு, உடல் நடுக்கத்தையும் பயத்தையும் கட்டுப்படுத்தி நடித்ததாகவும் அவர் பகிர்ந்துள்ளார்.

இந்த தகவல்கள் வெளியாகியதுடன், ரசிகர்களிடையே படத்திற்கான எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்துள்ளது. இப்படம் ஆக்ஷன் மற்றும் திரில்லர் அம்சங்களுடன் ஒரு வித்தியாசமான அனுபவத்தை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



ஜான்வி வெள்ளை நிற உடையில் ஹாட் போட்டோஷூட் எடுத்திருக்கிறார். அந்த புகைப்படங்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது.




# விஜய் கட்சிக்கு பிரச்சாரம் செய்த நடிகர் ராமராஜன்! அதற்கு சொன்ன காரணத்தை பாருங்க




வரும் ஏப்ரல் 23ம் தேதி தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தல் நடைபெறும் நிலையில், நடிகர் விஜய் அவரது கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தமிழ்நாடு முழுவதும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில் நடிகர் ராமராஜன் விஜய் கட்சி வேட்பாளரை ஆதரித்து தென்காசி மாவட்டம் ஆலங்குளம் தொகுதியில் பிரச்சாரம் செய்து இருப்பது வைரல் ஆகி இருக்கிறது.

அதிமுகவில் இருந்த அவர் தற்போது விஜய் கட்சியில் இணைந்துவிட்டாரா என பலரும் கேட்டு வருகின்றனர்.

இது பற்றி விளக்கம் கொடுத்து இருக்கும் ராமராஜன் "நான் விஜய்யின் தவெக-வில் இணையவில்லை. 35 வருடமாக என்னுடன் இருக்கும் எனது உறவினர் தேர்தலில் போட்டியிடுவதால் அவருக்காக பிரச்சாரம் செய்தேன்."

"நான் தவெக-வில் சேரவில்லை. உறவினர் என்பதால் மட்டுமே பிரச்சாரம் செய்ய வந்தேன். வேறு எந்த காரணமும் இல்லை" என அவர் கூறியுள்ளார்.

# பிறவாதீசுவரர்!

வருடத்தில் ஒருநாள் மட்டுமே திறக்கும் காஞ்சிபுரத்தின் மர்ம சிவன் கோவில் பிறவியை நீக்கும் பிறவாதீசுவரர்!

தமிழகத்தில் ஆன்மிக அதிசயங்கள் நிறைந்த பல தலங்கள் உள்ளன. அவற்றில் சில கோவில்கள் வரலாறால் புகழ் பெற்றவை, சில கோவில்கள் தெய்வீக சக்தியால் பக்தர்களை ஈர்க்கும் தலங்கள். ஆனால் சில கோவில்கள் — அவற்றின் மர்மமான வழிபாட்டு முறைகளாலும், அரிதான பாரம்பரியங்களாலும் — பக்தர்களை ஆச்சரியப்பட வைக்கும்.

அப்படிப்பட்ட ஒரு அரிய தலம் தான் காஞ்சிபுரத்தில் உள்ள பிறவாதீசுவரர் திருக்கோவில்.

இந்தக் கோவிலின் மிகப்பெரிய விசேஷம் என்ன தெரியுமா?

இந்த கோவில் வருடத்தில் ஒரே ஒரு நாள் மட்டுமே திறக்கப்படுகிறது.

அந்த ஒரு நாள் — மகாசிவராத்திரி.

மற்ற நாட்கள் முழுவதும் இந்த கோவில் கருவறை மூடியே இருக்கும் என்பது இந்தத் தலத்தின் மிகப்பெரிய ஆன்மிக மர்மமாக கருதப்படுகிறது.

**கோவில் நகரம் காஞ்சிபுரம்**

தமிழகத்தில் “கோவில் மாநகரம்” என்று போற்றப்படும் புனித நகரம் காஞ்சிபுரம். இந்த நகரம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆன்மிக மையமாக இருந்து வருகிறது.

பழமையான வரலாற்று குறிப்புகளின்படி, காஞ்சிபுரத்தில் 1008 சிவன் கோவில்கள் இருந்ததாக கூறப்படுகிறது.

அதில் இன்று பல கோவில்கள் மட்டுமே காணப்பட்டாலும், அந்த ஆன்மிக மரபு இன்னும் உயிரோடு உள்ளது.

**காஞ்சிபுரம் என்றாலே முதலில் நினைவிற்கு வருவது:**

காமாட்சி அம்மன் கோவில்
ஏகாம்பரேஸ்வரர் கோவில்
வரதராஜ பெருமாள் கோவில்

இந்த மூன்று பெரிய தலங்களே.

ஆனால் பலருக்குத் தெரியாத ஒரு ஆன்மிக ரகசியம் என்னவென்றால் — வருடத்திற்கு ஒருநாள் மட்டுமே திறக்கப்படும் சிவன் கோவில் கூட இங்கேயே உள்ளது.

**பல்லவ மன்னர்களின் ஆன்மிக நகரம்**

கி.பி. 300 முதல் 850 வரை காஞ்சிபுரம் பல்லவ மன்னர்களின் தலைநகரமாக இருந்தது.

அந்த காலத்தில் காஞ்சி நகரம் கலை, கல்வி, ஆன்மிகம் ஆகிய அனைத்திலும் செழித்து வளர்ந்தது.

மணிபல்லவம் எனப்படும் தீவிலிருந்து வந்ததாக கூறப்படும் இந்த மன்னர்கள் சிம்மக் கொடியை தங்கள் சின்னமாகக் கொண்டிருந்தனர்.

அவர்களின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட கோவில்கள் இன்று கூட பல்லவக் கட்டிடக் கலைக்கு சாட்சிகளாக நிற்கின்றன.

**அவற்றில் மிகவும் புகழ்பெற்றவை:**

கைலாசநாதர் கோவில்
வைகுண்டப் பெருமாள் கோவில்

ஆனால் இவை தவிர சிவகாஞ்சி பகுதியில் அமைந்துள்ள ஆறு அபூர்வமான கோவில்கள் பலருக்குத் தெரியாமல் உள்ளன.

அவற்றில் மிகவும் மர்மமானதும் ஆன்மிக ரகசியம் நிறைந்ததும் — பிறவாதீசுவரர் திருக்கோவில்.

வருடத்தில் ஒருநாள் மட்டுமே திறக்கும் கோவில்

இந்த கோவிலின் மிகப்பெரிய அதிசயம் என்னவென்றால் — வருடத்தில் ஒரே ஒரு நாள் மட்டும் இந்த கோவில் திறக்கப்படுகிறது.

அந்த நாள் மகாசிவராத்திரி.

அன்று இரவு, பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் காஞ்சிபுரத்திற்கு வந்து இந்த அரிய தரிசனத்தை காண காத்திருக்கிறார்கள்.

வருடம் முழுவதும் மூடியிருக்கும் இந்த கருவறை — அந்த ஒரு இரவில் மட்டும் திறக்கப்படுகிறது.

கோவில் வாசல் திறக்கும் அந்த நொடியே பக்தர்கள் மனமுருகி இறைவனை வேண்டிக் கொள்வார்கள்:

“இந்தப் பிறவியே கடைசியாக இருக்கட்டும்... இனி மறுபிறவி வேண்டாம்”

என்று.

பக்தர்களின் நம்பிக்கையின்படி, அந்த ஒரு இரவில் கிடைக்கும் பிறவாதீசுவரர் தரிசனம் — பிறவிப் பிணியை நீக்கும் அருள் தரிசனம் ஆகும்.

கோவில் கட்டுமான சிறப்பு

இந்த ஆலயம் கி.பி. 700 முதல் 728 வரை ஆட்சி செய்த ராஜசிம்ம பல்லவன் காலத்தில் கட்டப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

மணற்கற்களால் கட்டப்பட்ட இந்த கோவில் பல்லவக் கட்டிடக் கலையின் அழகை வெளிப்படுத்துகிறது.

இந்த கோவிலின் கட்டுமான அமைப்பு மிகவும் தனித்துவமானது:

மேற்கு நோக்கி அமைந்த கருவறை
இரண்டு அடுக்கு விமானம்
எண்கோண வடிவில் அமைந்த கருவறை
செவ்வக வடிவில் அமைந்த முகமண்டபம்

இவை அனைத்தும் பல்லவ கால கட்டிடக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகள்.



தல வரலாறு வாமதேவ முனிவரின் தவம்

இந்தத் தல வரலாற்றில் முக்கியமான இடம் பெறும் ஒருவர் வாமதேவ முனிவர்.

ஐதீகத்தின் படி, அவர் தாயின் கருவில் இருந்தபோதே ஒரு பிரார்த்தனை செய்ததாக கூறப்படுகிறது.

“இறைவா... இனி மறுபிறவி வேண்டாம். இந்த வாழ்க்கையே கடைசி ஆகட்டும்.”

கருவில் இருந்தபடியே அவர் இறைவனை வேண்டியதாக புராணங்கள் கூறுகின்றன.

அந்த நேரத்தில் சிவபெருமான் அவருக்கு அருள் காட்சி தந்து கூறினார்:

“காஞ்சிபுரத்திற்கு வந்து எம்மை வழிபடு; உனக்கு மறுபிறவி இல்லை.”

பிறந்த பின் வாமதேவர் காஞ்சிபுரத்திற்கு வந்து ஒரு லிங்கத்தை பிரதிஷ்டை செய்து கடும் தவம் செய்தார்.

அந்த தவத்தின் பலனாக அவர் மறுபிறவி இல்லாத நிலையை அடைந்தார் என்று ஐதீகம் கூறுகிறது.

அதனால் தான் இத்தல இறைவன் பிறவாதீசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

பிறவாதீசுவரர் என்றால் — பிறவி நீக்கும் இறைவன் என்ற அர்த்தம்.

கோவில் சிற்பங்களின் அழகு

இந்த கோவிலின் கருவறையில் சிவலிங்கம் அருள்கூர்கிறது.

அதன் பின்புறச் சுவரில் சோமாஸ்கந்தர் வடிவில் சிவன், பார்வதி மற்றும் முருகன் காட்சி தருகின்றனர். அருகில் பிரம்மா மற்றும் விஷ்ணு சிற்பங்களும் காணப்படுகின்றன.

**தேவகோட்டங்களில்:**

தெற்கில் தட்சிணாமூர்த்தி
கிழக்கில் விஷ்ணு
வடக்கில் பிரம்மா

வெளிப்புறச் சுவர்களில்:

துர்கை
கஜலட்சுமி

போன்ற தெய்வங்களின் அழகிய சிற்பங்கள் பல்லவக் கால சிற்பக்கலையின் உயர்ந்த நயத்தை வெளிப்படுத்துகின்றன.

**எங்கு அமைந்துள்ளது?**

இந்த மர்மமான பிறவாதீசுவரர் திருக்கோவில் காஞ்சிபுரம் நகரின் சிவகாஞ்சி பகுதியில் அமைந்துள்ளது.

இது கம்மாளத் தெருவில், பச்சைவண்ணர் கோவிலுக்கு அருகில் உள்ளது.

காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2 கிலோமீட்டர் தொலைவில் இந்தத் தலம் அமைந்துள்ளது.

இறுதியாக...

வருடம் முழுவதும் மூடியிருக்கும் ஒரு கோவில் —
ஒரே ஒரு இரவில் திறந்து பக்தர்களுக்கு தரிசனம் தருவது அதுவும் பிறவியை நீக்கும் இறைவன் என்று போற்றப்படும் சிவபெருமான்.

இதுபோன்ற ஆன்மிக மர்மங்கள் நிறைந்த தலங்கள் தமிழகத்தின் பெருமை.

**முனைவர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

# தினம் ஒரு தலைவர்கள் — வ.த.சுப்ரமணிய பிள்ளை வரலாறு

**வ.த.சுப்ரமணிய பிள்ளை (டிசம்பர் 11,1846- ஏப்ரல் 17,1909 ) வடக்குப்பட்டு தணிகாசலம் சுப்பிரமணிய பிள்ளை. தமிழறிஞர். திருப்புகழ் பாடல்களை தேடிக் கண்டடைந்து தொகுத்து வெளியிட்டார். மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றினார்.**

வடக்குப்பட்டு தணிகாசலம் சுப்பிரமணிய பிள்ளை செங்கல்பட்டில் டிசம்பர் 11,1846-ல் தணிகாசலம் பிள்ளை-இலட்சுமி அம்மாளுக்கு பிறந்தார். திருத்தணிகை முருகன் இவர்களது குலதெய்வம். தணிகாசலம் பிள்ளை தனி ஆசிரியர் மூலம் வீட்டிலேயே சுப்ரமணிய பிள்ளைக்கு ஆரம்பக்கல்வி அளித்தார். தமிழும் தெலுங்கும் பயின்ற சுப்ரமணிய பிள்ளை 1857-ல் செங்கல்பட்டு மிஷன் ஸ்கூலில் சேர்ந்து உயர்நிலைக் கல்வியை முடித்து அங்கேயே சில ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். இந்நிலையில் பள்ளி ஆய்வுக்காக வந்த வில்லியம் மில்லர் இவருடைய அறிவுத்திறன் கண்டு சென்னைக்கு வந்து மாகிண்டோஷ் ஸ்காலர்ஷிப் தேர்வு எழுதி வென்றால் தகுந்த வேலை கிடைக்கும் என்றார். அவ்வாறே சென்னை சென்று தேர்வெழுதி வென்றார். மில்லர் வாக்களித்தபடி இவருக்கு மாதம் எட்டு ரூபாய் ஸ்காலர்ஷிப் தொகை கிடைத்தது. தொடர்ந்து U.C.S. தேர்வு எழுதி வென்றார். எஃப்.ஏ. வகுப்பில் சேர்ந்து அதிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

சுப்ரமணிய பிள்ளை பச்சையப்பன் கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் மில்லரின் பரிந்துரையின் பேரில், ஸ்காட்லாண்ட் மிஷன் பள்ளியில் ஆசிரியப்பணியில் சேர்ந்தார். 1868-ல் வள்ளியம்மாளுடன் திருமணம் நிகழ்ந்தது. பின்னர் ஆசிரியர் பணியில் இருந்து விலகி மில்லரின் நண்பர் ஹாட்ஸன் துரையின் பரிந்துரையின் பேரில் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் எழுத்தர் பணியில் சேர்ந்தார். தலைமை எழுத்தராக பதவி உயர்வு பெற்று பின்னர் முன்சீஃப் தேர்வெழுதி வென்று 1882-ல் கடலூருக்கு மாவட்ட முன்சீஃப் ஆக நியமிக்கப்பட்டார். சோளிங்கர், விழுப்புரம் உள்ளிட்ட சில இடங்களில் பணியாற்றிய பின்னர் நாமக்கல்லில் முன்சீஃப் பொறுப்பேற்றார்.

நாமக்கல்லில் முன்சீஃப் பொறுப்பேற்ற பின்னர், மே 31, 1888-ல் அவர் எழுதிய குறிப்பில் "பெரிய ஊராகிய இந்த நாமக்கல்லில் ஒரு சிவன் கோயிலோ சைவக் கோயிலோ இல்லாதிருப்பது ஆச்சரியமாகவும் வருத்தத்தைத் தரத்தக்கதாயும் இருக்கிறது. குளக்கரையில் ஒரு பிள்ளையார் இருக்கிறார்; இவரே இவ்வூர்ச் சைவர்களுக்குள்ள மூர்த்தி" என்று குறிப்பிட்டிருக்கிறார். நாமக்கல்லில் மூன்றாண்டுகள் பணியாற்றிய பின்பு கும்பகோணம் சென்றார். கும்பகோணம் பற்றி தனது நாட்குறிப்பில் "கும்பகோணத்துக்கருகில் இவ்வளவு சிவஸ்தலங்கள் இருப்பது எனக்கு ஆநந்தமாயிருக்கிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு ஸ்தலமாவது தரிசித்து என் வாழ்நாள் பலன்படுகிறது" என்று எழுதியிருக்கின்றார். பின்னர் திருத்துறைப்பூண்டியில் சில ஆண்டுகாலம் வசித்தார். மதுரை, மானாமதுரை போன்ற இடங்களில் முன்சீஃபாகப் பணியாற்றிய பிள்ளை, 1901-ல் பணி ஓய்வு பெற்றார்.

வ.த.சுப்ரமணிய பிள்ளையின் மகன் புகழ்பெற்ற தமிழறிஞரான வ.சு. செங்கல்வராய பிள்ளை. சுப்ரமணிய பிள்ளையின் திருப்புகழ் பதிப்புப்பணி செங்கல்வராயபிள்ளையால் முன்னெடுக்கப்பட்டது

முருக வழிபாடு ஒவ்வொரு மாதமும் கார்த்திகை தினங்களில் தவறாது முருகன் ஆலயத்திற்குச் செல்வதும், பாடல் பாடுவதும் இவர் வழக்கமாக இருந்தது. தினமும் தவறாமல் 32 முறை 'தணிகையன் துணை' என்று எழுதியபின் தணிகேசன் மீது பாடல் பாடுவதைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார்.

மண்ணாசை என்கின்ற
மாயையில் வீழ்ந்து
மதிமயங்கி
எண்ணாது உனை
மறந்தேயிருதேன்
இனியாகிலும் என்
அண்ணா உன்றன்
பொன்னடிக் கமலம்
வந்தடையும் வண்ணம்
தண்ணார் அருள்புரியாய்
தணிகாசல சண்முகனே."

என்று திருத்தணிகை முருகன் மீது நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். சிவபெருமான், உமையம்மை, மகாவிஷ்ணு, விநாயகர், நால்வர் மீதும் இவர் பல்வேறு காலகட்டங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். திருப்புகழில் உள்ள 274 பாடல் பெற்ற தலங்களில் 176 இடங்களுக்குச் சென்று தரிசித்திருக்கிறார்.



திருப்பணிகள் அறச்செயல்களில் ஈடுபாடு கொண்டிருந்த சுப்பிரமணிய பிள்ளை பல்வேறு மடங்களுக்கும், ஆலயங்களுக்கும் திருப்பணிகள் செய்தார். விளக்குகள் அளிப்பது, பாத்திரங்கள், ஆலயமணிகள், வேல், ஆபரணங்கள் போன்றவற்றைத் தருவது, ஆலயங்களைப் புதுப்பிப்பது, கவனிப்பின்றி இருக்கும் தெய்வச் சிலைகளை ஆலயங்களில் பிரதிஷ்டை செய்வது போன்ற பணிகளைத் தொடர்ந்து செய்தார். மதுரையில் இருக்கும் பழமுதிர்சோலை ஆலயம் பாழ்பட்டுக் கிடப்பதைக் கண்டு வருந்தி அதைச் சீர்செய்வதில் முன்னின்றவர் பிள்ளை. சைவப் பணிக்காகவே பிறந்த நகரத்தார்களுக்கு இவர் "நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களுக்கு ஓர் விண்ணப்பம்" என்பதை எழுதி அனுப்பி ஆலயத்தைச் சீர்த்திருத்துமாறு வேண்டிக் கொண்டார். இவர் முயற்சியின் பேரில் நாளடைவில் ஆலயம் சீரமைக்கப்பட்டு சிறப்புப் பெற்றது.

திருப்புகழ் சுவடிகளுக்காக தொடர்ந்து பயணம் செய்தார். உ.வே. சாமிநாதையர் போன்றவர்களுக்கு கடிதம் எழுதி சுவடிகள் கோரினார். 1876-ம் ஆண்டு ஆறுமுக நாவலர் எழுதிய சைவ வினா-விடையில் திருப்புகழின் ஆறு பாடல்கள் இருந்தன. 1878-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் தேதி அன்று காஞ்சிபுரம் புத்தேரி தெரு அண்ணாமலை பிள்ளை என்பவரிடமிருந்து 750 பாடல்கள் கொண்ட ஏட்டுச்சுவடிகள் கிடைத்தன. அதே வருடம் பின்னத்தூர் சீனிவாச பிள்ளையிடம் 450 பாடல்களும், பின்னர் அவரிடமே 150 பாடல்களும் கிடைத்தன. மார்ச் 20, 1881-ல் கருங்குழி ஆறுமுக ஐயர் என்ற வீர சைவரிடமிருந்து 900 பாடல்கள் திருப்புகழ்ச் சுவடிகள் கிடைத்தன. 1903-ம் ஆண்டு திருமாகறல் என்ற ஊரில் 780 பாடல்கள் கிடைத்தன.

மஞ்சக்குப்பம் பள்ளி ஆசிரியர் சிவசிதம்பர முதலியார், சேலம் சரவணப்பிள்ளை, அனந்த ராம ஐயர் போன்றவர்களின் உதவியுடன் திருப்புகழ் முதல் பதிப்பை வெளியிட்டார். ஜூன் 5,1891 அன்று சிவசிதம்பர முதலியார் செப்பம் செய்து சீர்திருத்தி வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்களிடம் ஒப்படைத்து விட்டார். ஏப்ரல் 9, 1895 அன்று திருத்தம் செய்யப்பட்ட திருப்புகழ் பாடல்களை அச்சிற்குப் பதிப்பிக்கக் கொடுத்தார். சிவ சிதம்பர முதலியார் அச்சு வடிவத் திருப்புகழ் புத்தகத்தைக் காணாமலேயே இறந்துபோய் விட்டார்.

வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் திருப்புகழைப் புத்தக வடிவில் கண்ட அன்று தனது டைரிக்குறிப்பில் ஏப்ரல், 9 1895 அன்று இவ்வாறாகக் குறிப்பிடுகிறார். 'கடந்த 24 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட திருப்புகழ் பதிப்பு வேலை முடிய இவ்வளவு காலம் சென்றுள்ளது. இப்போதும் பாதி அளவே முடிந்துள்ளது'. (ரெங்கையா முருகன்

கிட்டத்தட்ட 24 ஆண்டுகள் இப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டிருந்தார். அந்தத் தொகுப்பிற்கு தமிழறிஞர்களிடையே மிக நல்ல வரவேற்பு கிடைத்தது. அடுத்த பாகம் வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தையும் பிள்ளைக்கு உண்டாக்கியது. உடனே அந்த முயற்சியில் ஈடுபட ஆரம்பித்தார். ஓய்வுபெற்றபின் தமது இறுதிக் காலம் முழுக்கத் திருப்புகழ் பாடல்களைத் தொகுப்பதிலேயே ஈடுபட்டார். 1902-ல் திருப்புகழ் இரண்டாம் பாகத்தை அச்சிட்டு வெளியிட்டார். திருப்புகழ் மூன்றாவது பாகத்தைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அது நிறைவேறுவதற்கு முன் மறைந்தார்.

# தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்து தெரிவித்த மேற்கு வங்க ஆளுநர்!

**கொல்கத்தா, ஏப்.15:**

தமிழ்நாடு ஆளுநராக 2021 செப்டம்பர் 18 முதல் கடந்த மார்ச் மாதம் வரை பதவி வகித்தவர் ஆர்.என். ரவி (73).

மேற்கு வங்க ஆளுநராகப் பதவி வகித்த சி.வி. ஆனந்த போஸ் தனது பதவியை மார்ச் 5 அன்று ராஜிநாமா செய்த நிலையில் மேற்கு வங்கத்துக்கான புதிய ஆளுநராக தமிழக ஆளுநராக இருந்த ஆர்.என். ரவி நியமிக்கப்பட்டார்.

இதையடுத்து, தமிழக ஆளுநர் பதவியை ராஜிநாமா செய்து மேற்கு வங்க ஆளுநராக மார்ச் 12 பதவியேற்றார். தமிழகத்திலிருந்து மேற்கு வங்கம் செல்லும்போது தமிழக மக்களுக்கு நீண்ட கடிதம் ஒன்றை எழுதியிருந்தார் ஆர்.என்.ரவி.

சித்திரை முதல் நாளான தமிழகம் முழுவதும் தமிழ் புத்தாண்டு நாள் கொண்டாடப்படும் நிலையில் மேற்கு வங்க ஆளுநரான ஆர்.என்.ரவி. வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அதில், “விசேஷமிக்க தமிழ்ப் புத்தாண்டு திருநாளில், தமிழ்நாட்டைச் சேர்ந்த எனது சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

# மேகதாது அணை விவகாரம்: தமிழக அரசு, சுப்ரீம் கோர்ட்டில் மறு ஆய்வு மனு தாக்கல்



**புதுடெல்லி, ஏப்.15:**

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டுவதற்கான கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையை நிராகரித்து திருப்பி அனுப்ப மத்திய நீர்வளத்துறை ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மனுவை சுப்ரீம் கோர்ட்டு கடந்த நவம்பர் 13-ந் தேதி தள்ளுபடி செய்து தீர்ப்பு கூறியது. இந்த தீர்ப்பை மறு ஆய்வு செய்யக்கோரி தமிழ்நாடு அரசு தரப்பில் வக்கீல் மிஷா ரோத்தகி மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், ’மேகதாது அணை திட்டத்துக்கு எதிராக தமிழ்நாடு அரசின் மனுவை நிராகரித்தது காவிரி வழக்கில் சுப்ரீம் கோர்ட்டு பிறப்பித்த தீர்ப்புக்கு எதிரானது. சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பை அமல்படுத் தும் அமைப்பாகவே காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உள்ளது. அதற்கு மேல் வேறு அதி காரம் இல்லை. இந்த விவகாரத்தில் ஆணையத்தை முடிவு எடுக்க சுப்ரீம் கோர்ட்டு அனுமதித் தது தவறானது.

எனவே, இந்த தீர்ப்பை மறுஆய்வுசெய்யவேண்டும்’ என கூறப்பட்டுள்ளது. இந்த மறு ஆய்வு மனுவை தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் கே.வினோத் சந்திரன், விபுல் எம்.பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு (புதன்கிழமை) விசாரிக்க உள்ளது.

# மத்திய அரசின் திட்டங்களைத் தடுக்கிறது திமுக: பிரதமர் மோடி குற்றச்சாட்டு



**புதுடெல்லி, ஏப்.15:**

தமிழகத்தின் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கன்னியாகுமரியில் புதன்கிழமையும் (ஏப். 15), கோவையில் சனிக்கிழமையும் (ஏப். 18) பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்ளும் பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது. இதனிடையே, பாஜக பூத் கமிட்டி உறுப்பினர்களுடன் பிரதமர் மோடி டில்லியில் இருந்து காணொலி வாயிலாக திங்கள்கிழமை ஆலோசனை நடத்தினார்.

சென்னை மயிலாப்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், பாஜக மூத்த தலைவரும், மயிலாப்பூர் தொகுதி வேட்பாளருமான தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் தமிழகத்தைச்சேர்ந்த 5 பூத்கமிட்டி உறுப்பினர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார்.

அப்போது அவர் பேசியதாவது: மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் திமுக அங்கம் வகித்தபோது, தமிழகத்துக்கு எந்தத் திட்டங்களையும் கொண்டு வரவில்லை. மக்கள் சந்தித்த பிரச்னைக்கும் அவர்கள் தீர்வு காணவில்லை. உதாரணத்துக்கு பாம்பன் பாலம் குறித்து காங்கிரஸ் ஆட்சியில் கவனம் செலுத்தவில்லை. ஆனால், பாஜக ஆட்சியில் பாம்பனில் செங்குத்து தூக்குப் பாலம் அமைக்கப்பட்டது.

தமிழகத்தில் 11 புதிய மருத்துவக் கல்லூரிகள் திறக்கவும், மருத்துவப் படிப்புகளுக்கான இடங்களை இரு மடங்காக உயர்த்தியும் பாஜக அரசு அனுமதி வழங்கியது.

தேர்தல் பரப்புரையின்போது, இதுபோன்ற மத்திய அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூறவேண்டும். காங்கிரஸ் ஆட்சிக்கும், பாஜக ஆட்சிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை மக்களிடம் விளக்க வேண்டும்.

திட்டங்களுக்கு முட்டுக்கட்டை: விவசாயிகள், சிறு வியாபாரிகள் மற்றும் ஏழை மக்களுக்காக பல திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, முத்ரா போன்ற திட்டத்தால் மக்கள் நேரடியாகப் பயன் பெறுகின்றனர்.

ஆனால், தமிழகத்தில் மத்திய அரசின் சில திட்டங்களை வேண்டுமென்றே திமுக அரசு தடுத்து வருகிறது. திமுக அரசின் இந்தப் போக்கால், மத்திய அரசின் வீடு கட்டும் திட்டத்தின் பயன் முழுமையாக மக்களுக்குச் சென்றடையவில்லை. திமுக ஆட்சியில் பெண்கள், சிறுமிகள் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது. போதைப் பொருள் விற்பனை கட்டுக்கடங்காமல் உள்ளது. இது பற்றியெல்லாம் திமுக அரசுக்கு எந்த அக்கறையும், கவலையும் இல்லை.

இதுபோன்ற சட்டத்துக்குப்புறம்பான செயல்களை ஆதரித்து, ஊக்கம் அளிப்பதே திமுக அரசு என்பதுதான் வருத்தமாக உள்ளது என்றார் பிரதமர் நரேந்திர மோடி.

# ஈரான் கச்சா எண்ணெய்யுடன் இந்தியா வந்த 2 கப்பல்கள்

**புதுடெல்லி, ஏப்.15:**

ஈரானில் இருந்து கச்சா எண்ணெய் ஏற்றிக் கொண்டு 2 கப்பல்கள் இந்தியா வந்துள்ளன. கடந்த 7 ஆண்டுகளில் இந்தியாவுக்கு ஈரானில் இருந்து கச்சா எண்ணெய் வருவது இதுவே முதல்முறையாகும்.

அமெரிக்கா விதித்த தடை காரணமாக ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா கடந்த 2019-ஆம் ஆண்டு மே மாதம் முதல் கடந்த 7 ஆண்டுகளாக நிறுத்தி வைத்திருந்தது. எனினும் ஈரான், அமெரிக்கா-இஸ்ரேல் இடையேயான மேற்காசிய போர் காரணமாக உலக நாடுகளில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுக்கும் நோக்கில், நடுக்கடலில் நிற்கும் ஈரான் கப்பல்களில் உள்ள 9 கோடியே 50 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய்யை வாங்க இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு 30 நாள்களுக்கு (வரும் 19-ஆம் தேதி வரை) அமெரிக்கா அனுமதி அளித்துள்ளது.

இதையடுத்து, ஈரானிய கச்சா எண்ணெய்யை இந்தியா மீண்டும் வாங்க ஆரம்பித்துள்ளது. நடுக்கடலில் நிற்கும் ஈரான் கப்பல்களில் உள்ள சுமார் 5 கோடியே 10 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய்யை இந்தியா வாங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. எஞ்சிய கச்சா எண்ணெய் பீப்பாய்களை சீனா, தென்கிழக்கு ஆசிய கண்டத்தில் உள்ள பிற நாடுகளுக்கு ஈரான் விற்றிருக்கலாம் என சொல்லப்படுகிறது.

இந்தியா வாங்கிய ஈரானிய கச்சா எண்ணெய்யில் 40 லட்சம் பீப்பாய்களுடன் 2 கப்பல்கள் இந்தியாவுக்கு வந்துள்ளன. அதில் ஒரு கப்பல் நேஷனல் ஈரானியன் டேங்கர் நிறுவனத்துக்கு சொந்தமானது. ஈரானின் காரக் தீவில் இருந்து ஏற்கெனவே ஏற்றப்பட்ட 20 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய்யுடன், அக்கப்பல் குஜராத் மாநிலம் சிக்காவில் உள்ள துறைமுகத்துக்கு வந்துள்ளது.

இன்னொரு கப்பலான ஜெயா, ஒடிஸா மாநிலம் பாரதீப் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

# மகளிர் இடஒதுக்கீட்டு சட்ட விவாதம்: இன்று எதிர்க்கட்சிகள் கூட்டம்

**பெங்களூரு, ஏப்.15:**

அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பெங்களூரில் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை கூறியதாவது: நாடாளுமன்றத்தில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ள மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவை அமல்படுத்துவது குறித்து விவாதிக்க புது தில்லியில் ஏப். 15-ஆம் தேதி அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்துள்ளோம். மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவை அமலாக்குவது தொடர்பாக கலந்தாலோசிக்க மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரேண் ரிஜிஜு எனக்கு எழுதியிருந்த கடிதத்துக்கு ஏற்கெனவே பதில் அனுப்பிவிட்டேன். அனைத்துக் கட்சிகளின் கருத்து அறிவதற்கு மத்திய அரசுக்கு விருப்பமில்லை. மாறாக, இந்த விவகாரத்தில் அரசியல் லாபம் அடைவதை மட்டுமே நோக்கமாக கொண்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்த விவகாரத்தை காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி ஏற்கெனவே கிளப்பியிருந்தார். இந்த மசோதாவுக்கு காங்கிரஸ் கட்சியின் முழு ஆதரவு உண்டு. காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் ஆதரித்து, ஒரு மனதாக சட்ட மசோதாவை நிறைவேற்றினோம். நாடாளுமன்றம், சட்டப் பேரவைகளில் மகளிருக்கு மூன்றில் ஒருபங்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கு காங்கிரஸ் கட்சி ஆதரவு அளித்து வந்துள்ளது. எனவே, புது டில்லியில் ஏப். 15-ஆம் தேதி அனைத்து எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவின் அடிப்படையில் எங்களது அடுத்தகட்ட நடவடிக்கை இருக்கும். மகளிர் இடஒதுக்கீட்டு சட்ட மசோதாவை நாங்கள் எதிர்ப்பதாக கூறுவதில் உண்மையில்லை. இந்த சட்ட மசோதாவை அமல்படுத்துவதில்தான் சில யோசனைகளை கூற விரும்புகிறோம் என்றார்.

# நடப்பு ஆண்டில் தென்மேற்கு பருவமழை இயல்புக்கு குறைவாக இருக்கும்: இந்திய வானிலை ஆய்வு மையம்



**புதுடெல்லி, ஏப்.15:**

நாட்டில் தென்மேற்கு பருவமழை ஜூன் மாதம் 2-வது வாரத்தில் தொடங்கி செப்டம்பர் வரை பெய்யும். அப்போது, இந்தியாவின் வட பகுதிகள் அதிக மழைப்பொழிவை பெறும். தமிழகத்திற்கு வடகிழக்கு பருவமழை காலத்தில் அதிக மழை கிடைக்கும்.

இந்த நிலையில், இந்திய வானிலை ஆய்வு மையம் இன்று வெளியிட்டு உள்ள செய்தியில், நடப்பு ஆண்டில் நாட்டில் தென்மேற்கு பருவமழை (ஜூன் முதல் செப்டம்பர் வரை) இயல்பை விட குறைவாக இருக்க கூடும் என்று கணித்துள்ளது. இது நீண்ட கால சராசரியில் 92 சதவீதம் (5 சதவீதம் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருக்க கூடும்) என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 1971 முதல் 2020 ஆண்டு காலகட்டத்திற்கான பருவ மழையின் நீண்ட கால சராசரி 87 செ.மீ. என்ற அளவில் உள்ளது. இந்நிலையில், நடப்பு 2026-ம் ஆண்டில் மழை பொழிவுக்கான சாத்தியம், இயல்புக்கு குறைவாக (நீண்ட கால சராசரியில் 90-95 சதவீதம்) அல்லது பற்றாக்குறை (90 சதவீதத்திற்கும் குறைவாக) என்ற பிரிவுகளில் இருக்க கூடும் என கணிக்கப்பட்டு உள்ளது. எனினும், மே மாதம் இறுதி வாரத்தில் பருவமழைக்கான புதுப்பிக்கப்பட்ட முன்னறிவிப்பு வெளியிடப்படும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

# அமெரிக்க நீர்வீழ்ச்சியில் விழுந்து இந்தியர் உயிரிழப்பு

**வாஷிங்டன், ஏப்.15:**

ஆந்திர மாநிலம், விஜயநகரம் மாவட்டம், பொப்பிலி பகுதியை சேர்ந்தவர் சிங்கிரெட்டி சாய் ஸ்ரீஹரிகிருஷ்ணா (26). இவர் அமெரிக்காவின் மிசோரி அருகே செயிண்ட் லூயிஸ் பகுதியில் உள்ள வெஸ்ட் மின்ஸ்டர் எனும் இடத்தில் தனது நண்பர்களுடன் வசித்து வந்தார். பொறியியல் பட்ட மேற்படிப்பு (எம்எஸ்) முடித்து அங்குள்ள ஒரு நிறுவனத்தில் பணியாற்றி வந்தார்.

இவருக்கு சிறு வயது முதலே நீச்சலில் ஆர்வம் மிக அதிகம். இவர் அமெரிக்காவில் நீச்சல் பயிற்சியாளராக கூட பணியாற்றி உள்ளார். இந்நிலையில், கடந்த 12ம் தேதி ஞாயிற்றுக்கிழமை தனது பிறந்த நாளை கொண்டாட சாய் ஸ்ரீஹரிகிருஷ்ணா மற்றும் அவரது 4 நண்பர்கள் கலிஃபோர்னியாவில் உள்ள மெராமெக் ஸ்டேட் பார்க் பகுதிக்கு சென்றனர். அங்கு உள்ள ஒரு நீர்வீழ்ச்சிக்கு சென்று அனைவரும் நீச்சலடித்து உற்சாகமாக கொண்டாடி மகிழ்ந்தனர். அப்போது, திடீரென வெள்ளத்தில் சாய் ஸ்ரீஹரிகிருஷ்ணா அடித்துச் செல்லப்பட்டார். இதனை கண்டு, சக நண்பர்கள் அவரை காப்பாற்ற முயற்சித்தும் பலன் இல்லை. அதற்குள் சாய் கிருஷ்ணா முழுமையாக தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டார். உடனே இது குறித்து போலீஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மீட்பு படையினரும் 15 நிமிடத்திற்குள் சம்பவ இடத்திற்கு சென்று சாய் ஸ்ரீஹரிகிருஷ்ணாவை தேடினர். பின்னர், நதிக்கரையில் சாய் ஸ்ரீஹரிகிருஷ்ணாவின் சடலம் இருப்பதை கண்டு மீட்டெடுத்தனர்.

இது குறித்து ஆந்திராவில் உள்ள அவரின் பெற்றோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை அறிந்து பெற்றோர், உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் தான் சாய் ஸ்ரீஹரிகிருஷ்ணாவுக்கு பல முயற்சிகளுக்கு பின்னர் அமெரிக்காவில் வேலை கிடைத்தது. அதற்குள், அவர் பிறந்த நாளிலேயே இறந்து விட்டாரே என அவரது பெற்றோர்கள் கதறி அழுகின்றனர். சடலத்தை சொந்த ஊருக்கு கொண்டு வரும் முயற்சிகளும் நடைபெற்று வருவதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

# சி.பி.எஸ்.இ. 9ம் வகுப்பு பாடப் புத்தகங்கள்: என்.சி.இ.ஆர்.டி. வெளியீடு




**புதுடெல்லி, ஏப்.15:**

மத்திய இடைநிலை கல்வி வாரியமான சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு, புதிய கல்விக் கொள்கையின்படி இந்த ஆண்டு, 9-ம் வகுப்பு பாடப்புத்தகங்கள் மாற்றப்பட்டுள்ளன.

கடந்த 1ம் தேதி முதல் புதிய கல்வியாண்டு துவங்கி உள்ள நிலையில், 9-ம் வகுப்பு பாட புத்தகங்கள் கிடைக்காதது சர்ச்சையானது. இதனையடுத்து பாட புத்தகங்கள் தயாரிப்பு பணி விறுவிறுப்பாக நடப்பதால், வரும் 15-ம் தேதிக்குள் விற்பனைக்கு வெளியிடப்படும் என என்.சி.இ.ஆர்.டி. தெரிவித்தது.

இதனையடுத்து தற்போது ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகளுடன் அறிவியல் பாடத்துக்கான புத்தகங்களை என்.சி.இ.ஆர்.டி. டில்லியில் வெளியிட்டுள்ளது.

# நாட்டின் சில்லறை பணவீக்கம் 3.4 சதவீதமாக அதிகரிப்பு

**புதுடெல்லி, ஏப்.15:**

நாட்டின் சில்லறை பணவீக்கம் மார்ச் மாதத்தில் 3.4 சதவீதமாக அதிகரித்துள்ளது.

2024-ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட புதிய கணக்கீட்டு முறையின்கீழ், மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள 3-ஆம் மாத தரவு இதுவாகும். அதன்படி, கடந்த ஜனவரியின் 2.75 சதவீதம், பிப்ரவரியின் 3.21 சதவீதத்திலிருந்து தொடர்ந்து 3-ஆவது மாதமாக பணவீக்கம் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், இது ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ள 4 சதவீத இலக்கிற்குள்ளேயே இருப்பதால், வரும் மாதங்களில் ரிசர்வ் வங்கி நிதிக் கொள்கையில் (வட்டி விகிதங்கள்) மாற்றம் இருக்குமா என்ற எதிர்பார்ப்பு குறைந்துள்ளது. மார்ச் மாத பணவீக்கம் உயர்வுக்கு, உணவுப் பொருள்களின் விலையேற்றம் முக்கியக் காரணியாகப் பார்க்கப்படுகிறது. ஜனவரியில் 2.13 சதவீதமாகவும், பிப்ரவரியில் 3.47 சதவீதமாகவும் இருந்த உணவுப் பணவீக்கம், மார்ச்சில் 3.87 சதவீதமாக அதிகரித்துள்ளது. மதிப்பீட்டு மாதத்தில் தேங்காய் (கொப்பரை), தக்காளி, காலிஃபிளவர் போன்றவற்றின் விலை அதிகரித்துள்ளது. வெங்காயம், உருளைக்கிழங்கு, பூண்டு, துவரம் பருப்பு, கொண்டைக்கடலை ஆகியவற்றின் விலை குறைந்துள்ளது.

எரிசக்தி துறை: மின்சாரம் மற்றும் எரிவாயு பிரிவில் பணவீக்கம் 1.52 சதவீதத்திலிருந்து 1.65 சதவீதமாக மட்டுமே உயர்ந்துள்ளது.

‘மத்திய கிழக்கு போர்ச்சூழலால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்த போதிலும், பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தாமல் மத்திய அரசு கட்டுப்படுத்தியுள்ளது பாராட்டுக்குரியது’ என இந்திய வர்த்தக, தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு (அசோசெம்) தலைவர் நிர்மல் கே.மிண்டா தெரிவித்துள்ளார்.

நகரம், கிராமப்புற நிலை: கடந்த மாதம் போன்றே நகர்ப்புறங்களைவிட கிராமப்புறங்களில் பணவீக்கத்தின் தாக்கம் அதிகமாக உணரப்பட்டுள்ளது. நகர்ப்புற பணவீக்கம் 3.02 சதவீதத்திலிருந்து 3.11 சதவீதமாக உயர்ந்த நிலையில், கிராமப்புறங்களில் 3.37 சதவீதத்திலிருந்து 3.63 சதவீதமாக கணிசமாக அதிகரித்துள்ளது. பணவீக்க விகிதத்தில் மாநிலங்களுக்கு இடையே பெரும் வேறுபாடு காணப்படுகிறது. தெலங்கானா மாநிலம் 5.83 சதவீதத்துடன் முதலிடத்தில் உள்ளது. அதேநேரம், வடகிழக்கு மாநிலமான மிசோரமில் பணவீக்கம் மிகக் குறைவாக 0.66 சதவீதம் பதிவாகியுள்ளது.

# நொய்டா கலவரம்: குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்திய உ.பி. அரசு!



**புதுடெல்லி, ஏப்.15:**

உத்தரப் பிரதேசத்தின் நொய்டா - காசியாபாத் பகுதியின் பல்வேறு தொழிற்பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள ஊதிய திருத்தக் கோரிக்கைகளுக்காகப் போராட்டம் நடத்தினர்.

1,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பெரும் குழுக்களாகக் கூடி பல இடங்களில் முழக்கங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்தப் போராட்டம் நொய்டாவின் ஃபேஸ்-2 மற்றும் செக்டர் 60 போன்ற பகுதிகளில் நேற்று கலவரமாக மாறியது. சில பகுதிகளில் மிகவும் மோசமடைந்து கல் எறிதல், பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்துதல் மற்றும் தீவைப்பு போன்ற சம்பவங்கள் நடைபெற்றன. இதில் ஒரு வாகனம் எரிக்கப்பட்டது. பல வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன. இதனால், அங்கு பெரும் பதற்றம் நிலவியது. இதனால், அந்தப் பகுதி முழுவதும் காவல்துறையினர் குவிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து, ”ஊதிய உயர்வு வழங்க உயர்நிலை அதிகாரக் குழு முடிவு செய்துள்ளது. இந்த முடிவுக்கு உத்தரப் பிரதேச முதல்வர் நேற்று இரவு ஒப்புதல் அளித்துள்ளார்" என கௌதம் புத்த நகர் மாவட்ட ஆட்சியர் மேதா ரூபம் தெரிவித்தார். இதன்படி, கௌதம் புத்த நகர் மற்றும் காசியாபாத் பகுதியில் உள்ள திறனற்ற தொழிலாளர்கள் ஊதியம் முன்பு ரூ.11313 ஆக இருந்ததை ரூ.13,690 ஆகவும், ஓரளவு திறனுள்ள தொழிலாளர்கள் ஊதியம் ரூ.15,059 ஆகவும், திறனுள்ள தொழிலாளர்கள் ஊதியம் ரூ.16,868 ஆகவும் உயர்த்திப் பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மற்ற மாநகராட்சிப் பகுதிகளில் திருத்தப்பட்ட மாத ஊதியமானது திறனற்ற தொழிலாளர்களுக்கு ரூ.13,006, ஓரளவு திறனுள்ள தொழிலாளர்களுக்கு ரூ.14,306 மற்றும் திறனுள்ள தொழிலாளர்களுக்கு ரூ.16,025 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




## ஓமலூர் அருகே பயங்கரம்; அரசு பள்ளிக்குள் புகுந்து ஆசிரியை வெட்டி கொலை



**ஓமலூர், ஏப்.15:** ஓமலூர் அருகே நடத்தையில் சந்தேகப்பட்டு, அரசுப்பள்ளிக்குள் புகுந்து ஆசிரியையை அரிவாளால் வெட்டி கொலை செய்த கணவன், 5 வயது மகளுக்கு விஷம் கொடுத்து கொன்று விட்டு, தானும் தற்கொலை செய்து கொண்டார். சேலம் மாவட்டம் ஓமலூர் அடுத்த பாலிக்கடை பகுதியைச் சேர்ந்தவர் ஸ்ரீவித்யா (45). இவர் காமலாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில், கடந்த 25 ஆண்டுகளாக ஆசிரியையாக பணியாற்றி வந்தார். தற்போது 6 முதல் 8ம் வகுப்பு மாணவர்களுக்கு பாடம் நடத்தி வந்தார். நேற்று மதிய இடைவேளையின்போது, ஸ்ரீவித்யா 5 வயது மகளான அசோக சிவசுந்தரியுடன், பள்ளி வளாகத்தில் அமர்ந்து மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது, அங்கு திடீரென வந்த அவரது கணவர் விஜயமுருகன் (50), தான் மறைத்து வைத்திருந்த அரிவாளால் ஸ்ரீவித்யாவை சரமாரியாக வெட்டினார். இதில் தலை மற்றும் கழுத்துப்பகுதியில் வெட்டு விழுந்த ஸ்ரீவித்யா, ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தார். கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த இந்த பயங்கர சம்பவத்தைக் கண்டு அங்கிருந்த மாணவ, மாணவிகள் பயத்தில் அலறியடித்து ஓடினர். சத்தம் கேட்டு சக ஆசிரியர்கள் ஓடி வந்து, விஜயமுருகனை பிடிக்க முயன்றனர். ஆனால், அதற்குள் அவர் தனது மகளை தூக்கி கொண்டு, பள்ளியின் சுற்றுச்சுவரைத் தாண்டி குதித்து தப்பி ஓடி விட்டார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த ஓமலூர் போலீசார், பொதுமக்கள் உதவியுடன் விஜயமுருகனை தேடினர். அப்போது, பள்ளிக்கு பின்புறம் அரைகிலோ மீட்டர் தொலைவில் உள்ள காட்டுப்பகுதியில், சிறுமியும், விஜயமுருகனும் வாயில் நுரை தள்ளியபடி இறந்து கிடந்தனர். விசாரணையில், விஜயமுருகன் மகளுக்கு விஷம் கொடுத்து கொன்று விட்டு, தானும் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின.

தர்மபுரி மாவட்டம், காரிமங்கலத்தை சேர்ந்த விஜயமுருகனுக்கு, ஏற்கனவே திருமணமாகி விவாகரத்தான நிலையில், 10 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீவித்யாவை 2வதாக திருமணம் செய்துள்ளார். விஜயமுருகன் எந்த வேலைக்கும் செல்லாமல் வீட்டிலேயே இருந்து வந்துள்ளார். இதனால், தம்பதி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக ஸ்ரீவித்யாவின் நடத்தையில் சந்தேகப்பட்டு, அவரை விஜயமுருகன் அடித்து துன்புறுத்தி வந்துள்ளார். உன்னைக் கொலை செய்து விடுவேன் என அவர் மிரட்டியதால், பயந்து போன ஸ்ரீவித்யா, இதுகுறித்து தொளசம்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.மேலும், உயிருக்கு பயந்து, கடந்த ஒரு மாதமாக கணவரைப் பிரிந்து, ஓமலூர் நகரில் மகளுடன் வசித்துக் கொண்டு பள்ளிக்கு வந்து சென்றுள்ளார். இந்நிலையில் தான், நேற்று அவரை பள்ளிக்குள் புகுந்து விஜயமுருகன் வெட்டி கொலை செய்துள்ளார். இந்த சம்பவம் ஓமலூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மாணவி கொலை வழக்கில் மும்பையில் தலைமறைவாக இருந்த வாலிபர் கைது

**பாலக்காடு, ஏப்.15:** கேரள மாநிலம் கோழிக்கோடு அருகே உள்ள குதிரவட்டம் பகுதியில் மாணவியை கொன்ற வழக்கில் கைதாகி மனநல காப்பகத்தில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அங்கிருந்து தப்பி சென்ற வாலிபரை போலீசார் மும்பையில் கைது செய்தனர்.

மலப்புரம் மாவட்டம் மஞ்சேரி அடுத்த நருக்கராவை சேர்ந்தவர் வினீஷ் வினோத் (26) இவர் ஆட்டோ டிரைவர். மலப்புரம் மாவட்டம் பெரிந்தல்மன்னா அடுத்த எலம்குளம் பகுதியை சேர்ந்த திரிஷியா (21) என்ற மாணவியை ஒருதலையாக காதலித்து வந்துள்ளார்.

இவரது காதலுக்கு திரிஷியாவின் பெற்றோர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் ஆத்திரமடைந்த வினீஷ் வினோத் கடந்த 2021ம் ஆண்டு ஜூன் 17ம் தேதி திரிஷியாவின் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் அத்துமீறி புகுந்து திரிஷியாவை கத்தியால் குத்தி கொலை செய்தார்.

இதுகுறித்த புகாரின் பேரில் போலீசா வழக்குப்பதிவு செய்து வினீஷ் வினோத்தை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். அங்கு அவர் பலமுறை தற்கொலைக்கு முயற்சியில் ஈடுப்பட்டார். இதனால் மனநலம் பாதிக்கப்பட்டிருப்பதால் கோழிக்கோடு அருகேயுள்ள குதிரவட்டம் மனநல காப்பகத்தில் சிகிச்சைக்காக அனுமதிக்கபட்டார்.

இந்நிலையில் கடந்த 3 மாதங்களுக்கு முன் காப்பகத்திலிருந்து தப்பி சென்றார். இது தொடர்பாக கோழிக்கோடு போலீசார் வழக்குப்பதிவு செய்து வாலிபரை தேடி வந்தனர். இதற்கிடையில் அவர் மும்பையில் பதுங்கி இருப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

அதன்பேரில் தனிப்படை போலீசார் மும்பை விரைந்தனர். தொடர்ந்து, மும்பை போலீசார் உதவியுடன் அங்கு பதுங்கி இருந்த வினீஷ் வினோத்தை தனிப்படை போலீசார் கைது செய்தனர்.

## இ-மெயில் மூலம் நடிகை திரிஷா வீட்டிற்கு வெடிகுண்டு மிரட்டல்: மர்ம நபருக்கு போலீஸ் வலை



**சென்னை, ஏப்.15:** தேனாம்பேட்டையில் உள்ள நடிகை திரிஷா வீட்டிற்கு இ-மெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மர்ம நபரை போலீசார் தேடி வருகின்றனர். காவல்துறை இயக்குநர் அலுவலகத்திற்கு நேற்று காலை இ-மெயில் ஒன்று வந்தது. அதில் இன்னும் சற்று நேரத்தில் நடிகை திரிஷா வீட்டில் வெடிகுண்டு வெடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதை பார்த்த போலீசார் உடனே பாதுகாப்பு பிரிவுக்கு தகவல் அளித்தனர். அதன்படி தேனாம்பேட்டை போலீசார் மற்றும் வெடி குண்டு நிபுணர்கள், மோப்ப நாய் உதவியுடன் தேனாம்பேட்டை செனடாப் சாலையில் உள்ள நடிகை திரிஷா வீட்டில் அதிரடி சோதனை நடத்தினர்.

ஒரு மணி நேரம் நடந்த சோதனையில் எந்த வெடி குண்டும் சிக்கவில்லை. இதையடுத்து இது வெறும் புரளி என தெரியவந்தது. அதைதொடர்ந்து தேனாம்பேட்டை போலீசார் இ-மெயில் மூலம் வெடி குண்டு மிரட்டல் விடுத்த மர்ம நபரை தேடி வருகின்றனர். கடந்த சில நாட்களாக வெளிநாடுகளில் இருந்து சினிமா பிரபலங்கள் மற்றும் அரசியல் பிரபலங்கள் வீடுகளுக்கு இ-மெயில் மூலம் வெடி குண்டு மிரட்டல் விடுத்து வந்த சம்பவம், சற்று குறைந்து இருந்த நிலையில், தற்போது மீண்டும் குண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு வரும் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தேர்தல் நாள் அப்டேட்களை செயலியில் பதிவு செய்ய தேர்தல் அதிகாரிகளுக்கு பயிற்சி




**சென்னை, ஏப்.15:** தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு வரும் 23-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான தொழில்நுட்ப ஆயத்தப் பணிகளில் ஒரு முக்கிய மைல்கல்லாக, புரோ மாட்யூல் (PRO Module-ECINET) குறித்த மாநில அளவிலான பயிற்சி முகாம் நேற்று சென்னையில் நடைபெற்றது. இசிஐ நெட் புரோ மாட்யூல் என்பது தேர்தல் பணியில் இருக்கும் தலைமை வாக்குச்சாவடி அலுவலருக்காக உருவாக்கப்பட்ட ஒரு செயலியாகும்.

வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி பொருட்கள் வருகை, மாதிரி வாக்குப்பதிவு, வாக்குப்பதிவு தொடக்கம், அந்தந்த நேரப்படி வாக்குப்பதிவு சதவீதம் அப்டேட், வாக்குப்பதிவு நிறைவு போன்ற தேர்தல் நாள் அப்டேட்களை அதிகாரிகள் கைபேசி செயலி மூலம் நேரடியாக பதிவு செய்ய இந்த புரோ மாட்யூலை பயன்படுத்துகிறார்கள்.

இந்த பயிற்சியில் அனைத்து தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய பிற அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்திய தேர்தல் ஆணையத்தின் மூத்த அதிகாரிகள், சந்தோஷ் பதாரியா மற்றும் தருண் மிஸ்ரா ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், மூத்த அதிகாரிகள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு புரோ மாட்யூலை பயன்படுத்துவது குறித்த நேரடிப் பயிற்சி வழங்கப்பட்டது.

தேர்தல் வாக்குப் பதிவு நாளில் வாக்குப் பதிவு விவரங்களை எவ்வித தாமதமுமின்றி உடனுக்குடன் வழங்குவதற்காக, வாக்குப்பதிவு தரவுகளை டிஜிட்டல் முறையில் நிர்வகிக்கவும், பதிவேற்றவும் அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்குத் தேவையான முழுமையானத் திறனை வழங்குவதையும், இசிஐநெட் அமைப்பைச் செயல்படுத்துவதையும் மையமாகக் கொண்டு இந்தப் பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சி மட்டுமின்றி அனைத்து தொகுதிகளிலும் இசிஐநெட் செயலியில் உள்ள புரோ மாட்யூல் பயன்பாட்டை உறுதி செய்யும் விதமாக கள சோதனையானது வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வாக்குச்சாவடி மையங்களில் இருந்து மேற்கொள்ளப்பட்டது.

மண்டல அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் மேற்பார்வையாளர்கள் ஆகியோர், நேரடிச் சூழலில் புரோ மாட்யூல் எவ்விதக் குறையுமின்றிச் செயல்படுவதை உறுதிசெய்யும் வகையில், இச்செயல்முறையை நிகழ்நேரத்தில் கண்காணித்தனர்.

இன்றைய பயிற்சி மற்றும் களச் சோதனைகள் நிறைவடைந்துள்ள நிலையில், புரோ மாட்யூல் செயல்பாடுகள் குறித்த இறுதிக்கட்டக் கள சோதனை, நாளை (15-ம் தேதி) அனைத்து வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களால் நடத்தப்படவுள்ளது.

## 75-வது நிறுவன தினத்தை கொண்டாடும் தெற்கு ரயில்வே



**சென்னை, ஏப்.15:** இந்திய ரயில்வேயின் மிகப்பழமையான மண்டலங்களில் ஒன்றான தெற்கு ரயில்வே இன்று (ஏப்.14) 75-வது நிறுவன தினத்தைக் கொண்டாடுகிறது.

மெட்ராஸ் மற்றும் தென் மராட்டிய ரயில்வே, தென்னிந்திய ரயில்வே மற்றும் மைசூர் மாநில ரயில்வே ஆகிய 3 அமைப்புகளை ஒன்றிணைத்து தெற்கு ரயில்வே கடந்த 1951-ம் ஆண்டு ஏப்.14-ம் தேதி உருவாக்கப்பட்டது.

தென்னிந்தியாவில் ரயில்வேயின் வரலாறு 1856-ல் ராயபுரம் முதல் ஆற்காடு (வாலாஜா ரோடு) வரை இயக்கப்பட்ட முதல் ரயிலிலிருந்து தொடங்குகிறது.

பரிணாம வளர்ச்சி

1860-களில் மேற்கு கடற்கரை இணைப்பு, 1870-களில் மும்பை இணைப்பு மற்றும் 1900-களில் ஹவுரா இணைப்பு எனத் தேசிய அளவில் இது விரிவடைந்தது. 1899-ல் நீலகிரி மலை ரயில் மற்றும் 1925-ல் பாம்பன் பாலம் போன்றவை பொறியியல் அதிசயங்களாகத் திகழ்ந்தன.

நிர்வாக வசதிக்காக, 1966-ல் தென் மத்திய ரயில்வேயும், 2003-ல் தென் மேற்கு ரயில்வேயும் பிரிந்து உருவாகின. தற்போது சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், பாலக்காடு மற்றும் திருவனந்தபுரம் ஆகிய 6 கோட்டங்களுடன் 5,100-க்கும் மேற்பட்ட கிலோ மீட்டர் தூரத்துக்குத் தெற்கு ரயில்வே சேவை வழங்குகிறது.

பல்வேறு பாரம்பரியம் மற்றும் சிறப்புகளைக் கொண்ட தெற்கு ரயில்வே தனது 75 ஆண்டுக்காலப் பயணத்தைக் கொண்டாடும் வேளையில், தெற்கு ரயில்வே பாரம்பரியத்தைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், நவீன தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் பயணிகளுக்கான உலகத்தரம் வாய்ந்த வசதிகளை வழங்குவதில் உறுதியாக உள்ளது. தெற்கு ரயில்வே வெளியிட்ட செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆற்காடு அடுத்த விளாப்பாக்கத்தில் நிதி நிறுவன பங்குதாரரின் வீட்டில் ரூ.1.25 கோடி பறிமுதல்




**ஆற்காடு, ஏப்.15:** ஆற்காடு அடுத்த விளப்பாக்கத்தில் தனியார் நிதி நிறுவன பங்குதாரர் வீட்டில் இருந்து ரூ.1.25 கோடியை சென்னை வருமான வரித்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த விளாப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த தனியார் நிறுவன பங்குதாரரான இளங்கோவன் (67) என்பவரின் வீட்டிலும், ஆனைமல்லூர் அருகே தனியார் உணவு பொருட்கள் தயாரிக்கும் நிறுவனத்திலும் நேற்று முன்தினம் சென்னை வருமான வரித்துறையினர் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அதிகாரிகள் திடீர் சோதனை மேற்கொண்டனர்.

இதில், இளங்கோ முறையான வரி செலுத்தவில்லை என எழுந்த குற்றச்சாட்டின்படி இந்தச் சோதனை நடத்தப்பட்டது.

இதன்படி அவரதுவீட்டில் இருந்து உரிய ஆவணங்கள் மற்றும் முறையாக கணக்குகள் இல்லாமல் வைத்திருந்த மொத்தம் ரூ.1.25 கோடியும், முக்கிய ஆவணங்களையும் வருமான வரித்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து சென்னைக்கு கொண்டு சென்றனர்.

ஆனைமல்லூர் அருகே தனியார் உணவு பொருட்கள் தயாரிக்கும் நிறுவனத்தில் நடத்திய சோதனையில் பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

மேலும், இளங்கோவின் வீட்டில் இருந்த பணம் தேர்தலுக்கு வாக்காளர்களுக்கு ஓட்டுக்காக கொடுக்க வைத்திருந்தபணமா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

## செட்டிகுளம் தண்டாயுதபாணி கோயிலில் படிபூஜை விழா கோலாகலம்

**பாடாலூர், ஏப்.15:** பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா செட்டிகுளத்தில் அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் பிரசித்தி பெற்ற தண்டாயுதபாணி சுவாமி கோயில் உள்ளது. கோயிலில் ஏறுவதற்கு சுமார் 200 படிகள் உள்ளன. சித்திரை பிறப்பன்று இந்த படிகளுக்கு படிபூஜை நடைபெறும். அதேபோல் இந்தாண்டு தமிழ் புத்தாண்டு தினமான இன்று காலை 41-ம் ஆண்டு படி பூஜை விழா கோலாகலமாக நடந்தது.

படி பூஜை விழாவை முன்னிட்டு மலையின் அடிவாரத்தில் உள்ள படிக்கட்டில் கணபதி பூஜை, கோ பூஜை நடந்தது. பின்னர் பக்தர்கள் மற்றும் திரளான பெண்கள் கையில் செங்கரும்பை ஏந்தி மலையை சுற்றி அரோகரா... என்ற பக்தி கோஷத்துடன் கிரிவலம் வந்தனர். பின்னர் திருவிளக்கு பூஜை, படி பூஜை நடந்தது.

இதில் செட்டிகுளம், நாட்டார்மங்கலம், கூத்தனூர், ஆலத்தூர்கேட், மருதடி, நாரணமங்கலம், இரூர், பாடாலூர், குரூர், நக்கசேலம், சிறுவயலூர், மாவலிங்கை, பெரகம்பி, பொம்மனப்பாடி, சத்திரமனை, வேலூர், ரெங்கநாதபுரம், தம்பிரான்பட்டி, கீழக்கணவாய், செஞ்சேரி, குரும்பலூர், அம்மாபாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த திரளான பெண்கள் கலந்துக் கொண்டு படியில் விளக்கு ஏற்றி பூஜை செய்து வழிபாடு நடத்தினர்.

அதனையடுத்து தண்டாயுதபாணிக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் பாதுகாப்பு பணியில் 295 கம்பெனி துணை ராணுவப் படையினர்



**சென்னை, ஏப்.15:** தமிழக தேர்தல் பாதுகாப்பு பணியில் 295 கம்பெனி துணை ராணுவப் படையினர் ஈடுபட உள்ளனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 23-ம் தேதி நடைபெற உள்ளது. 3,579 ஆண்கள், 443 பெண்கள், மூன்றாம் பாலினத்தவர் ஒருவர் என மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 5.73 கோடி பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 75,064 ஆக உயர்ந்துள்ளது. இதில் பதற்றமான வாக்குச்சாவடிகள் 5,938 உள்ளன.

தேர்தல் பணியில் 3.40 லட்சம் அரசு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இவர்களில் இதுவரை தபால் வாக்கு செலுத்த 1.50 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர். அடுத்தடுத்த கட்டங்களில் நடைபெறும் பயிற்சியின் போது, தபால் வாக்களிக்க தகுதியானவர்களிடம் 12-டி படிவம் வழங்கப்பட்டு, அந்த பயிற்சி மையங்களிலேயே தபால் வாக்குகள் பதிவு செய்யப்படும். பின்னர், மூடி முத்திரையிட்ட உறையில் வைத்து திருச்சியில் உள்ள பொது மையத்துக்கு அனுப்பப்படும்.

தமிழகத்தில் 85 வயதுக்கு மேற்பட்ட 4 லட்சம் வாக்காளர்கள், 4.63 லட்சம் மாற்றுத் திறனாளிகள் உள்ளனர். இவர்களில் 1.20 லட்சம் முதியோர், 70 ஆயிரம் மாற்றுத் திறனாளிகள் என மொத்தம் 1.90 லட்சம் பேர் 12-டி படிவம் பெற்று, தபால் வாக்கு செலுத்த விருப்பம் தெரிவித்துள்ளனர். இவர்களில் 15 ஆயிரம் பேர் தபால் வாக்கு செலுத்தியுள்ளனர்.

தேர்தல் பாதுகாப்பு பணியில் 295 துணை ராணுவப் படை கம்பெனிகள் ஈடுபட உள்ளன. இதுவரை 115 கம்பெனிகள் வந்துள்ளன. மற்ற கம்பெனி வீரர்களும் தமிழகத்துக்கு வந்த வண்ணம் உள்ளனர். பாதுகாப்பு பணிகளில் 1.40 லட்சம் போலீஸார், ஊர்க் காவல் படையினர் மற்றும் முன்னாள் ராணுவத்தினரும் ஈடுபடுகின்றனர்.

தேர்தல் செலவினங்களுக்காக ரூ.1,032 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் 20,757 பேரிடம் அனுமதிபெற்ற துப்பாக்கிகள் உள்ளன.

இதில் 3 ஆயிரம் துப்பாக்கிகள் தவிர்த்து மற்ற அனைத்தும் அருகில் உள்ள காவல் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தேடப்படும் குற்றவாளிகளில் இதுவரை 2,650 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்றவர்கள் தேடப்பட்டு வருகின்றனர்.

வாக்குப்பதிவுக்கு மொத்தம் 75,164 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், விவிபாட் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இயந்திரங்கள் பயன்படுத்தப்படும். 140 தொகுதிகளில் ஒரே ஒரு இயந்திரமும், 89 தொகுதிகளில் 2 இயந்திரங்களும், முதல்வர் ஸ்டாலின் போட்டியிடும் கொளத்தூர், விஜய் போட்டியிடும் பெரம்பூர், ஆர்.கே. நகர் ஆகிய 3 தொகுதிகளில் 3 இயந்திரங்களும், கரூரில் மட்டும் அதிகபட்சமாக 5 இயந்திரங்களும் பயன்படுத்தப்பட உள்ளன. இது மட்டுமின்றி, அவசரத் தேவைக்காக கூடுதல

லாக 20 முதல் 30 சதவீத இயந்திரங்கள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

‘சி-விஜில்’ செயலி மூலம் 3,791 புகார்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் 727 புகார்கள் தீர்க்கப்பட்டுள்ளன. வாக்குப்பதிவை முன்னிட்டு, ஏப்.21, 22, 23 ஆகிய 3 நாட்கள் டாஸ்மாக் மதுபானக் கடைகளுக்கு விடுமுறை விடப்படுகிறது.

ரூ.727 கோடி பறிமுதல்: தேர்தல் பறக்கும் படை, நிலைக் கண்காணிப்பு குழுக்கள் நடத்தும் சோதனையில் இதுவரை ரூ.126 கோடி பணம், ரூ.295

கோடி மதிப்பில் தங்கம், வெள்ளி நகைகள், ரூ.75 கோடி போதை பொருட்கள், ரூ.2 கோடி மதுபானங்கள் மற்றும் இலவசமாக வழங்குவதற்காக கொண்டு செல்லப்பட்ட ரூ.227 கோடி மதிப்பிலான பரிசுப் பொருட்கள் என மொத்தம் ரூ.727 கோடி ரொக்கம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதில், உரிய ஆவணங்களை சமர்ப்பித்தவர்களிடம் ரூ.381 கோடி மதிப்பிலான பணம், நகை ஆகியவை திருப்பித் தரப்பட்டுள்ளன.

தமிழக அரசின் செய்தித் துறை அதிகாரிகள் முதல்வர் ஸ்டாலினுடன் பாதுகாப்பு வாகனங்களில் சென்று செய்தி அனுப்புவது குறித்து தேர்தல் ஆணையத்துக்கு புகார் அனுப்பப்பட்டுள்ளது. வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் பட்டுவாடா செய்வதை கட்டுப்படுத்த ட்ரோன் கேமரா பயன்படுத்துவது குறித்து தேர்தல் ஆணையம் முடிவு செய்யும் என்று தேர்தல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ராக்கெட் லாஞ்சர் வெடித்து என்ஜினீயரிங் மாணவர் பலி

**செங்கல்பட்டு, ஏப்.15:** செங்கல்பட்டு மாவட்டம், சிங்கப்பெருமாள் கோவில் அருகே அனுமந்தபுரம் கிராமத்தில் துப்பாக்கி சுடும் பயிற்சி தளம் உள்ளது. இந்த பயிற்சி தளத்தில் மத்திய, மாநில போலீசார் மற்றும் துணை ராணுவத்தினர், தேசிய பாதுகாப்பு படையினர் உள்பட பல்வேறு பிரிவுகளை சேர்ந்த பாதுகாப்பு வீரர்கள் அடிக்கடி துப்பாக்கி சுடுதல், ராக்கெட் லாஞ்சர் பயிற்சி மற்றும் வெடிகுண்டு வீசும் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

துப்பாக்கி சுடும் பயிற்சி தளத்தில் வெடித்தும் வெடிக்காமல் சிதறி கிடக்கும் கையெறி குண்டுகள், ராக்கெட் லாஞ்சர்கள் அனுமந்தபுரம் வனப்பகுதியில் கிடப்பது வழக்கம்.

இந்த நிலையில் பொத்தேரியில் உள்ள பல்கலைக்கழகத்தில் 4-ம் ஆண்டு என்ஜினீயரிங் படிக்கும் மாணவர்கள் பெங்களூருவை சேர்ந்த ஹீமான்யூ யாதவ் (வயது 21), ஐதராபாத்தை சேர்ந்த விஷால் (21), உத்தரபிரதேசத்தை சேர்ந்த ஆர்யன் சர்மா (21), ஜம்முவை சேர்ந்த கிருஷ்ணா (21), டெல்லியை சேர்ந்த நிக்காஷ் (21), வீராட் (23) ஆகிய 6 பேரும் நேற்று அனுமந்தபுரத்தில் உள்ள மலை பகுதிக்கு 3 மோட்டார் சைக்கிளில் சென்றனர்.

மலை உச்சிக்கு சென்ற நிலையில் அங்கு வெடிக்காமல் கிடந்த ராக்கெட் லாஞ்சரை ஒரு மாணவர் எட்டி உதைத்ததாக தெரிகிறது. அப்போது அது அருகில் இருந்த பாறையில்பட்டு பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதில் பலத்த காயம் அடைந்த ஹீமான்யூ யாதவ் என்ற மாணவர் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தார். விஷால், ஆர்யன் ஷர்மா, கிருஷ்ணா, நிக்காஷ் ஆகிய 4 பேரும் பலத்த காயம் அடைந்தனர்.

இந்த விபத்து பற்றி தகவல் அறிந்த சிங்கப்பெருமாள் கோவில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உயிரிழந்த மாணவரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் படுகாயம் அடைந்த 4 மாணவர்களையும் மீட்டு அருகில் உள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

மாணவன் எட்டி உடைத்தது ராக்கெட் லாஞ்சரா? அல்லது வெடி குண்டா? என்பது குறித்து வெடிகுண்டு நிபுணர்கள் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று ஆய்வு செய்த பிறகு தான் தெரியவரும் என்று போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சிங்கப்பெருமாள் கோவில் போலீசார் வழக்குப்பதிவு செய்து கல்லூரி மாணவர்கள் எதற்காக மோட்டார் சைக்கிளில் மலை உச்சிக்கு சென்றார்கள் என்பது குறித்து தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

இந்த சம்பவம் செங்கல்பட்டு மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சமயபுரம் மாரியம்மன் கோவில் சித்திரை தேரோட்டம் கோலாகலம்



**திருச்சி, ஏப்.15:** தமிழகத்தில் உள்ள அம்மன் தலங்களில் மிகவும் பிரசித்தி பெற்றது திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோவிலாகும். இந்த கோவிலில் உள்ள அம்மனை வேண்டினால் நினைத்தது நடக்கும், செல்வம் பெருகும், குடும்பத்தில் அமைதி நிலவும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. உலக நன்மைக்காகவும், பக்தர்கள் நோய் நொடியின்றி வாழவும், அவர்களின் குடும்பம் செழிக்கவும் வேண்டி இக்கோவிலில் மாசி மாதம் கடைசி ஞாயிறு முதல் பங்குனி மாதம் கடைசி ஞாயிறு வரை பூச்சொரிதல் நடைபெறும்.

இந்த விழாக்காலங்களில் மரபு மாறி தன்னைத்தானே வருத்திக்கொண்டு பக்தர்களுக்காக 28 நாட்கள் அம்மனே பச்சைப் பட்டினி விரதம் இருப்பது இக்கோவிலின் தனிச் சிறப்பு. இந்த நாட்களில் அம்மனுக்கு அரிசி, துள்ளுமாவு, இளநீர் மட்டுமே நைவேத்தியம் செய்யப்படுகிறது.

இந்த காலகட்டத்தில் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு பகுதிகளில் இருந்து அம்மனை தரிசனம் செய்வதற்காக ஆயிரக்கணக்கான பக்தர்கள் பாதயாத்ரையாகவும், வாகனங்களிலும் வந்து சென்றனர். பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றும் வகையில் மஞ்சள் உடை உடுத்தி, கடும் விரதமிருந்து பாதயாத்திரையாக வருகின்றனர். கோவிலில் உள்ள தெப்பக்குளத்தில் புனித நீராடி அலகு குத்தியும், காவடி எடுத்தும், அக்னி சட்டி ஏந்தியும், பால்குடம் மற்றும் முளைப்பாரி எடுத்து வந்தும் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது நடந்து சென்று தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றினர். இதன் தொடர்ச்சியாக சித்திரை மாதம் தேர்த்திருவிழா வெகு விமரிசையாக நடைபெறுவது வழக்கம். அவ்வகையில் இந்த ஆண்டின் சித்திரை தேர்த்திருவிழா கடந்த 5ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. அன்று காலை அம்மன் சிறப்பு அலங்காரத்தில் கேடயத்தில் புறப்பாடாகி கொடிமரம் முன்பு எழுந்தருளினார். தொடர்ந்து சிவாச்சாரியார்களால் வேத மந்திரங்கள் முழங்க கோயிலின் உள்பிரகாரத்தில் உள்ள தங்க கொடிரத்திற்க்கும், அஸ்திர தேவர்களுக்கும் சிறப்பு பூஜைகள் நடைபெற்று மந்திரங்கள், மேளதாளங்கள் முழங்க மாரியம்மன் படம் தாங்கிய கொடியினை கொடிமரத்தில் ஏற்றினர்.

விழா நாட்களில் தினமும் காலையில் அம்மன் பல்லக்கில் எழுந்தருளி கோவிலை வலம் வந்து அருள்பாலித்தார். இரவில் தினமும் அம்மன் சிம்மம், பூதம், அன்னம், ரிஷபம் யானை, சேஷா, மரக்குதிரை உள்ளிட்ட வாகனங்களில் எழுந்தருளி திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தார். நேற்று இரவு அம்மன் வெள்ளிக் குதிரை வாகனத்தில் எழுந்தருளி வையாளி கண்டருளும் நிகழ்ச்சி நடைபெற்றது

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்ட விழா இன்று நடைபெற்றது. இதற்காக காலை 10.3 மணிக்குள் மேல் அம்மன் தேரில் எழுந்தருளி திருத்தேர் வடம் பிடித்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வடம் பிடித்து தேர் இழுத்தனர். திருத்தேரில் ஆடி அசைந்து வந்த மாரியம்மனை லட்சக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்தனர். திருத்தேருக்கு முன்னால் பக்தர்கள் கரகம் எடுத்தும், முளைப்பாரி எடுத்தும், அலகு குத்தியும், பறவைக் காவடி எடுத்தும் ஊர்வலமாக வந்தனர்.

தேரோட்டத்தைமுன்னிட்டு பக்தர்கள் குவிந்தவண்ணம் உள்ளனர். இதனால் பக்தர்களின் பாதுகாப்பு கருதி, சமயபுரம் மாரியம்மன் கோவில் மண்டபத்தில் தற்காலிக போலீஸ் நிலையம் அமைக்கப்பட்டு இருந்தது. கூட்ட நெரிசலில் சிக்கி அவதிப்படும் பக்தர்களை மீட்கும் வகையில் சமயபுரம் தீயணைப்பு மற்றும் மீட்பு பணி நிலைய அதிகாரி மற்றும் தீயணைப்பு வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

தேரோட்டத்தைமுன்னிட்டு பல்வேறு அமைப்புகளின் சார்பாக தண்ணீர் பந்தல் அமைத்து நீர்மோர், பானகம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ச.கண்ணனூர் பேரூராட்சி நிர்வாகம் செய்திருந்தது.

# ஐபிஎல் போட்டியை காண செல்பவர்கள் மெட்ரோ ரயிலில் இலவசமாக பயணிக்கலாம்

**சென்னை, ஏப்.15:** ஐபிஎல் போட்டியை காண செல்பவர்களுக்கு மெட்ரோ ரயிலில் இலவசமாக பயணிக்கலாம் என மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது. சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் இடையிலான ஐபிஎல் லீக் போட்டி இன்று (ஏப்ரல்.14) நடைபெற உள்ளது. ஸ்பான்சர் செய்யப்பட்ட ஐபிஎல் போட்டிகான பயணச்சீட்டு வைத்திருப்பவர்கள், பயணச்சீட்டுகளில் உள்ள தனித்துவமான க்யூஆர் குறியீட்டை தானியங்கி நுழைவு இயந்திரத்தில் ஸ்கேன் செய்து மெட்ரோவில் பயணிக்கலாம். இந்த சிறப்பு சலுகை ஒரு சுற்றுப் பயணத்திற்கு (2 நுழைவு மற்றும் 2 வெளியேறுதல்) பயன்படுத்தலாம். சென்னையில் செயல்பாட்டில் உள்ள எந்த மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்தும் போட்டி நடைபெறும் மைதானத்திற்கு அருகிலுள்ள அரசினர் தோட்டம் மெட்ரோ ரயில் நிலையத்திற்கு இடையே மெட்ரோ ரயிலில் எந்தவித கட்டணமும் இல்லாமல் பயணிக்கலாம்.

அரசினர் தோட்டம் மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து நீட்டிக்கப்பட்ட சிறப்பு மெட்ரோ ரயில் சேவை குறித்த விவரங்கள்:

* அரசினர் தோட்டம் மெட்ரோ நிலையத்திலிருந்து விம்கோ நகர் பணிமனை மற்றும் விமான நிலைய மெட்ரோ நிலையங்களை நோக்கிச் செல்லும் கடைசி மெட்ரோ ரயில் நள்ளிரவு 1 மணிக்கு புறப்படும்.

* பச்சை வழித்தடத்தில் (வழித்தடம் 2) உள்ள மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு செல்லும் பயணிகள் புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் மட்டுமே வழித்தடம் மாற்றம் செய்து கொள்ளலாம்.

# பெரம்பூர் ரெயில் நிலையத்தில் ரூ.5 கோடி மதிப்பிலான போதை பொருள் பறிமுதல்




**சென்னை, ஏப்.15:** தமிழக சட்டசபைக்கான தேர்தல் ஏப்ரல் 23-ந்தேதி ஒரே கட்டத்தில் நடத்தி முடிக்கப்படும். இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

இதன்படி, ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படும் பொருட்களை பறக்கும் படை அதிகாரிகள் கைப்பற்றி வருகின்றனர். கண்காணிப்பு குழுக்களும் அமைக்கப்பட்டு, தீவிர சோதனை நடந்து வருகிறது.

இந்நிலையில், நியூ தின்சுகியா-எஸ்.எம்.வி.டி. பெங்களூரு எக்ஸ்பிரஸ் ரெயிலின் பொதுப்பெட்டி ஒன்றில் வெள்ளி நிறத்தில் சூட்கேஸ் ஒன்று கிடந்துள்ளது. அதனை யாரும் எடுக்காத நிலையில், ரெயில்வே பாதுகாப்பு படையை சேர்ந்த காவல் ஆய்வாளர் அருண் குமார் தலைமையில், சி. கோபால கிருஷ்ணன் மற்றும் எம். ராஜேஷ் உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் அதனை கைப்பற்றினர்.

5 கிலோ எடை கொண்ட அவற்றின் மதிப்பு ரூ.5 கோடி இருக்கும் என கூறப்படுகிறது. அந்த சூட்கேசில் சட்டவிரோத போதை பொருள் மறைத்து வைக்கப்பட்டு இருந்தது. அவற்றை கைப்பற்றி கூடுதல் விசாரணைக்காக, போதை பொருள் ஒழிப்பு வாரியத்தின் சி.ஐ.டி. பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

# மேகேதாட்டு விவகாரம்: உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மறுஆய்வு மனு

**புதுடெல்லி/ சென்னை, ஏப்.15:** மேகேதாட்டு அணை திட்டத்துக்கு எதிரான தமிழக அரசின் மனுவை உச்ச நீதிமன்றம் கடந்த ஆண்டு நிராகரித்த நிலையில், அந்த உத்தரவை மறுஆய்வு செய்யக் கோரி தமிழக அரசு மனு தாக்கல் செய்துள்ளது.

தலைமை நீதிபதி அமர்வில் இந்த மறுஆய்வு மனு நாளை விசாரணைக்கு வருகிறது.

கர்நாடகாவில் காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டு அணை கட்டுவது தொடர்பான விரிவான திட்ட அறிக்கையை ஆய்வு செய்ய காவிரி நீர் மேலாண்மை ஆணையத்துக்கு தடைவிதிக்க கோரி தமிழக அரசு, தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் அய்யாக்கண்ணு உள்ளிட்டோர் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

கடந்த 2025 நவ.13-ம் தேதி அப்போதைய தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் அமர்வில் இந்த மனுக்கள் விசாரணைக்கு வந்தன.

அப்போது, 'காவிரியின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சி, காவிரி தீர்ப்பாயத்தின் உத்தரவை மீறும் செயலாகும்.

இத்திட்டம் செயல்பாட்டுக்கு வந்தால் தமிழகம் பெரிதும் பாதிக்கப்படும்' என்று தமிழக அரசு சார்பில் வாதிடப்பட்டது.

'மேகேதாட்டு அணை திட்டத்தால் தமிழகம் எந்த வகையிலும் பாதிக்கப்படாது. தமிழகத்துக்கு ஒதுக்கப்பட்ட தண்ணீரை வழங்க இத்திட்டம் தடையாக இருக்காது' என்று கர்நாடக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், "கர்நாடக அரசின் திட்ட வரைவு அறிக்கை, காவிரி ஆணையம் மற்றும் காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் பரிசீலனையில் மட்டுமே உள்ளது.

அந்த அமைப்புகள் ஒப்புதல் அளித்தால் மட்டுமே வரைவு அறிக்கை ஏற்கப்படும் என்று மத்திய நீர் ஆணையம் தெளிவுபடுத்தி உள்ளது. தவிர, காவிரி வழக்கின் தீர்ப்பின் படி தண்ணீரை திறக்க மறுத்தால் கர்நாடக அரசு நீதிமன்ற அவமதிப்புக்கு உள்ளாகும்.

மேலும், மேகேதாட்டு அணைக்கான விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டால் அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடரலாம். தற்போதைய சூழ்நிலையில், தமிழக அரசின் இந்த மனு அவசரப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், விசாரணைக்கு ஏற்க முடியாது" என்று கூறி, தமிழக அரசின் மனுவை நிராகரித்தனர்.

இந்நிலையில், இந்த உத்தரவு காவிரி வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முரணாக இருப்பதாகவும், மேகேதாட்டு அணை திட்டத்துக்கான விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்க காவிரி நீர் மேலாண்மை ஆணையத்துக்கு அதிகாரம் இல்லை என்றும் தெரிவித்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் மறுஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் கே.வினோத் சந்திரன், வி.எம்.பஞ்சோலி அமர்வு நாளை (ஏப்.15) விசாரிக்க உள்ளது. இதனிடையே மறுஆய்வு மனுக்கள் வழக்கமாக நீதிபதிகள் அறையில் விசாரிக்கப்படும்.

ஆனால், இந்த மனுவை நீதிமன்றத்தில் விசாரிக்க கோரி தலைமை நீதிபதி அமர்வில் தமிழக அரசு சார்பில் நேற்று முறையிடப்பட்டுள்ளது.




# 'திருச்சியை அதிமுக கோட்டையாக்க வேண்டும்' - பொன்மலையில் இபிஎஸ் பேச்சு!



**சென்னை, ஏப்.15:** தமிழ்நாடு 2026 தேர்தலையொட்டி அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அதிமுக மற்றும் அதன் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து மாவட்டவாரியாக பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். அந்தவகையில் இன்று திருச்சி, பொன்மலையில் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது பேசிய அவர்,.

"திருச்சியை அதிமுகவின் கோட்டையாக மாற்றுங்கள். ஸ்டாலின் பேசுவது அத்தனையும் பொய். திமுக பல நாடகத்தை அரங்கேற்றுகிறது. திமுக ஆட்சியில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டதாகவும் வேலைவாய்ப்பு கிடைத்ததாகவும், இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சி என்றும் பொய்பேசி வருகிறார்.

அதிமுக ஆட்சியின் ஒப்பந்தங்கள் செயல்பாட்டுக்கு வந்ததால் தான் இந்த வளர்ச்சி ஏற்பட்டது. இந்த பொருளாதார வளர்ச்சிக்கு மூலகாரணம் அதிமுக அரசு. திமுக ஆட்சியில் 1179 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், 15 லட்சத்து கோடி ரூபாய் தொழில் முதலீடு ஈர்க்கப்பட்டது என்று ஸ்டாலின் பச்சை பொய் சொல்கிறார், இதனால் 35 லட்சம் பேருக்கு வேலை கிடைத்ததாம்.

இது எப்படிப்பட்ட பொய்..? ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்ட பின் நிலம் எடுக்க வேண்டும், நிலத்தை வாங்கிய பின், மாநில அரசு, மத்திய அரசிடம் அனுமதி வாங்க வேண்டும், நிதி ஆதாரத்தை பெருக்க வேண்டும். முழுதாக பணம் வைத்துக்கொண்டு யாரும் தொழிற்சாலை அமைப்பதில்லை, வங்கியை நாடி கடன் பெற வேண்டும், அதன் பின்னர் கட்டிடம் கட்ட வேண்டும், அப்புறம் தான் தொழிற்சாலை பயன்பாட்டுக்கு வரும், அதற்கு நான்காண்டுகள் பிடிக்கும்.

ஆனால் ஸ்டாலின் என்ன சொல்கிறார்..? ஒப்பந்தம் போட்டவுடனே 35 லட்சம் பேருக்கு வேலை கிடைத்துவிட்டதாம். திருச்சியில் 9 தொகுதியில் எத்தனை பேருக்கு வேலை கிடைத்தது? மக்களை ஏமாற்றியே காலத்தை ஓட்டிவிட்டார். அதிமுக ஆட்சியின் திட்டங்கள் செயல்பாட்டுக்கு வந்துதான் இரட்டை இலக்க வளர்ச்சி.

சட்டமன்றத்தில் ஏன் வேளாண்மைதுறையில் வளர்ச்சி குறைந்தது என்ற கேள்விக்குப் பதில் இல்லை. தொழிற்துறை மந்திரியிடம் கேட்டேன், தொழிற்சாலை நிலை என்ன, எவ்வளவு பேருக்கு வேலை என்று வெள்ளை அறிக்கை கேட்டால், வெள்ளை பேப்பர் காட்டுகிறார்.

எதிர்க்கட்சித் தலைவராக நான் கேட்கிறேன், ஆனால் அவர் வெள்ளைப் பேப்பரைக் காட்டுகிறார். உண்மைதான், அவர் ஒன்றுமே செய்யவில்லை, செய்தால்தானே காட்ட முடியும், அவர் உண்மையை ஒப்புக்கொண்டதற்கு நன்றி. வெளிநாட்டுக்கு தொழில் முதலீட்டை ஈர்க்க போகிறேன் என்று சென்று, அங்கு போய் சைக்கிள் ஓட்டுகிறார்.

அதுக்குத்தான் உங்களை முதலமைச்சர் ஆக்கினோமா? உங்கள் (மக்கள்) வரிப்பணத்தை எப்படி வீணடிக்கிறார் என்று பாருங்கள். இப்போதுதான் கடைக்குச் சென்று டீ குடிக்கிறார், இப்போதாவது, ஏழைகளின் கஷ்டத்தைப் பாருங்கள். சைக்கிள் ஓட்டுவதையும், பளு தூக்குவதையும் படம் பிடித்து டிவியில் காட்டுகிறார். அவருக்கு ஓட்டு போட்டதற்கு இதுதான் பலன்." என தெரிவித்தார்.

# நோட்டுக்கு வாக்கு; நாட்டுக்கு வேட்டு: சீமான் ரைமிங்

**சென்னை, ஏப்.15:** நோட்டுக்கு வாக்கை விற்றால், அது நாட்டுக்கு வேட்டு என்று நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரில் நாதக வேட்பாளர்களை ஆதரித்து நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சீமான் பேசியதாவது: தமிழ்நாட்டை அதிமுகவும், திமுகவும் 60 ஆண்டுகளாக மாறி மாறி ஆட்சி செய்து வருகின்றன. ஊழல், லஞ்சத்தை பெருக்குவதிலும், இயற்கை வளங்களை கொள்ளை அடிப்பதிலும், மக்களின் நலன்களை கெடுப்பதிலும் இந்த 2 கட்சிகளும் போட்டிப் போட்டுக் கொண்டு செயல்படுகின்றன. இந்த நாட்டையும், நாட்டு மக்களையும் வாழ விட வேண்டும் என்ற எண்ணம் இல்லாத கட்சிகள் தான் இவை.

தமிழகத்தில் ரூ.10.5 லட்சம் கோடிக்கு கடன் வைத்துள்ளனர். தமிழ்நாட்டின் பட்ஜெட் ரூ.3 லட்சம் கோடி தான். வட்டியே ரூ.1 லட்சம் கோடிக்கு மேல் கட்டுவதால் ஆசிரியர்கள், செவிலியர்கள், போக்குவரத்து தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியவில்லை. சாராயம் விற்று ரூ.50 ஆயிரம் கோடி வருமானம் பெற்று, அதில் அரசு நடத்தப்படுகிறது.

ஃபிரிட்ஜ், தாலிக்கு தங்கம், 6 சிலிண்டர், ரூ.8 ஆயிரம் கூப்பன் இதற்கெல்லாம் எங்கிருந்து காசு வரும். நோட்டுக்கு வாக்கை விற்றால், அது நாட்டுக்கு வேட்டு. திருடனில் என்ன சின்ன திருடன், பெரிய திருடன். திமுகவும் அதிமுகவும் ஒன்றுதான். இவ்வாறு அவர் பேசினார்.

# "சிறை சென்று திரும்பி வந்து பார்த்தால்..." - சசிகலா ஆதங்கம்



**சென்னை, ஏப்.15:** "நான் சிறை சென்றபோது ஒருவரிடம் கட்சி பதவியையும், மற்றொருவரிடம் ஆட்சி அதிகாரத்தையும் கொடுத்துவிட்டுச் சென்றேன். நான் நம்பிய இருவரும் என்னை ஏமாற்றி விட்டனர்" என்று முதுகுளத்தூரில் நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் சசிகலா பேசினார்.

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற கழக வேட்பாளர்களை ஆதரித்து சசிகலா பேசுகையில், "நான் சிறைக்குச் சென்றபோது, ஒருவரிடம் கட்சி பதவியையும், மற்றொருவரிடம் ஆட்சி அதிகாரத்தையும் கொடுத்துவிட்டுச் சென்றேன். நான் திரும்பி வரும்போது பார்த்தால் நிலைமை மாறிவிட்டது.

நான் நம்பிய இருவர் என்னை ஏமாற்றிவிட்டனர். பதவி கொடுத்தவருக்கு விசுவாசமாக இல்லாதவர்கள் மக்களுக்கு எப்படி விசுவாசமாக இருப்பார்கள்? எனவே, அவர்களை நம்ப முடியாது. திமுக கடந்த 5 ஆண்டுகளில் மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை. திமுக அரசு ரூ.10 லட்சம் கோடிக்கு மேல் கடன் வைத்துள்ளது. கடந்த தேர்தலில் அளித்த வாக்குறுதியை திமுக நிறைவேற்றவில்லை. அதனால் இவர்களையும் வரவிடக் கூடாது" என்றார்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM